www.tamilarangam.net

அனைவருக்கும் எம் புதுவருட வாழ்த்துக்கள்

# தேசம்

சர்வதேச தமிழ் சஞ்சிகை

தேசம் ☐ இதழ் 29 ☐ நவம்பர் 06 - டிசம்பர் 06 ☐ ISSN 1474 - 8770 ☐ www.thesamnet.com






உள்துறை அமைச்சை பணிய வைத்த வழக்கு



சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டமும் இலங்கையின் அழிவுப் பரிமாணங்களும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



போர் மேகங்கள் கலையாத மத்திய கிழக்கு

rasiahlaw@aol.com

Conveyancing

(Residential & Commercial)

Matrimonial

Immigration

Landlord & Tenants

Legal Aid work Undertaken

Tel: 020 8543 4040

Fax: 020 8543 2400

180A Merton High St,
South Wimbledon
London SW19 1AY

RASIAH & CO
SOLICITORS

www.tamilarangam.net

உள்ளே

01 தேசத்தின் பார்வை

02 பிரபாவின் சொற்பிளிவு: வட்டுக்கோட்டையிலிருந்து வன்னி வரை
**த ஜெயபாலன்**

06 புலிகளின் நான்காம் ஈழப்போருக்கான முஸ்தீபும் முஸ்லீம்கள் மீதான இரண்டாம் இனச்சுத்திகரிப்பு ஒத்திகையும்
**எஸ் எம் எம் பசீர்**

09 இலங்கை White List ல் இருந்து நீக்கம்: உள்துறை அமைச்சை பணிய வைத்த வழக்கு
**த ஜெயபாலன்**

11 ஒரு படுகொலை ஒரு பாடசாலை
**நட்சத்திரன் செவ்விந்தியன்**

14 நினைவுகள்: இ இரத்தின சபாபதி
**ரவி சுந்தரலிங்கம்**

15 நினைவுகள்: சு வில்வரட்ணம்
**என் செல்வராஜா**

16 மண்ணைத் தொடாத வேர்
**ரதன்**

19 சேது சமுத்திர கால்வாய்த் திட்ட அமுலாக்கமும் இலங்கையின் அழிவுப் பரிமாணங்களும்
**ச முருகையா**

24 தமிழர்களின் போராட்டத்தை அங்கிகரித்த பெரும்பான்மையினத் தலைவர்
**வே சிவராசா**

29 போர் மேகங்கள் கலையாத மத்திய கிழக்கு
**கோபால்**

36 நிபுணர்களின் தீர்வுப் பொதி
**பொன் சிவக்குமார்**

Chief Editor
T Jeyabalan
0044 208 279 0354
thesam97@hotmail.com
Administrative Editor
T Constantine
0044 791 944 4994
Editorial Board
Technical Support : S Raja
Type Setting : J Srirajani

THESAM
P O Box 35806,
London, UK,
E11 3JX.

# ஒரு வரலாற்றின் முடிவின் ஆரம்பம்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப கர்த்தாக்கள், அன்றைய நாயகர்கள் இப்பொழுது தமது வாழ்க்கையின் மறு அந்தத்தில் உள்ளனர். மிக அண்மைக் காலத்தில் ஏற்பட்ட நான் அறிந்த புஸ்பராஜா, மகா உத்தமன் ஆகியோரின் மரணங்கள் இப்பகுதியை எழுத வேண்டும் என்ற எண்ணத்தைத் தூண்டி இருந்தது. அதற்குள் ஈரோஸ் அமைப்பை உருவாக்கிய இளையதம்பி இரத்தினசபாபதி இன்று (டிசம்பர் 12, 2006) காலமாகிய செய்தி இதனை இன்றே எழுத வைத்துள்ளது.

இவர்கள் எல்லோரும் சமகால விடுதலைப் போராட்டத்தில் இருந்து ஒதுங்கி இருந்தவர்கள் அல்லது ஒதுக்கப்பட்டவர்கள். இவர்களோடு அன்று சமகாலத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த பலரும் இன்று ஒதுங்கி உள்ளனர் அல்லது ஒதுக்கப்பட்டு உள்ளனர். இன்று தமிழீழ விடுதலைப் போராட்டம் நண்பர்களையும் எதிரிகளையும் அடையாளம் தெரியாமல் சீரழிவுப் பாதையில் பயணித்துக் கொண்டுள்ளது. தமிழ் சமூகம் தன்னையறியாமலேயே அரசியல் அனாதைகளாகிக் கொண்டுள்ளது.

பணமோ அரசியல் செல்வாக்கோ குறைந்தது நெருக்கமான சொந்தமாவது இருந்தால் நாட்டுப் பற்றாளராகலாம் மாமனிதர் ஆகலாம். ஆனால் அன்று உண்மையான தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காக தமது எதிர்காலத்தை தொலைத்தவர்கள் இன்றும் அதனைத் தேட முடியாதவர்களாக ஆங்காங்கே தமது வாழ்க்கையை வாழ்ந்து முடிக்கின்றனர். எமது விடுதலைப் போராட்டத்தின் எழுதப்படாத பல பக்கங்கள் இவர்களுடனேயே எழுதப்படாமலே, அறியப்படாமலேயே போய்க்கொண்டு உள்ளது.

இந்திய சுதந்திரப் போராட்டத் தியாகிகள் தமது வயதான காலத்தில் அவர்களது ஓய்வூதியத்தைக் பெறமுடியாமல் சுதந்திர இந்தியாவில் படும் அவலங்களை எத்தனையோ தமிழ் சினிமாக்களில் பார்த்து உள்ளோம். இங்கு எமது விடுதலைப் போராட்டத்தில் சமகாலத்தில் பங்கெடுத்தவர்களையே போராட்ட காலத்திலேயே ஈழத்துத் தமிழ் சமூகம் அறிந்திருக்வில்லை. அதற்கு முயற்சிக்கவும் இல்லை. அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டாம் அவர்களது அர்ப்பணிப்புக்கு ஒரு கௌரவத்தையாவது வழங்க வேண்டாமா?

நாம் எந்த சூழலிற்கும் ஏற்றவாறு எம்மை தக்க வைப்பதிலும் வேகமாக நாம் வாழ்ந்த சூழலை மறக்கவும் கற்றுக் கொண்டு விட்டோம். நாமும் ஒர் நாள் மறக்கப்படுவோம் என்பதையும் மறந்துவிடுகின்றோம்.

இன்று நாம் புலம்பெயர்ந்து வாழும் ஆங்கிலேய சமூகம் பல பத்து ஆண்டுகளுக்கு முன் தன் சமூக இருப்புக்காக போராடியவர்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களின் அன்றைய அர்ப்பணிப்பிற்காக சேவைக்காக கௌரவிக்கிறது. ஆனால் இங்கு வாழும் எம் தமிழ் சமூகம் ஒரு தலைமுறை வரலாற்றின் முடிவின் ஆரம்பத்தில் இருப்பவர்களைக் கைவிட்டுவிட்டது. மாறாக பொதுப் பணத்தில் சம்பளத்துடன் சமூக சேவை செய்பவர்களுக்கும் பதவிக்காக சங்கம் வைப்பவர்களுக்கும் வியாபாரப் புள்ளிகளுக்கும், கவிதை எழுதுபவர்களுக்கும் விழா எடுப்பதிலும் கௌரவிப்பதிலும் மும்மரமாக உள்ளனர். அதை ஒரு நாகரீகமாக்கியும் உள்ளனர்.

நாம் இது பற்றி அவசியம், அவசரமாக சிந்திக்க வேண்டும். அல்லது எமது வரலாறுகளை சமாதிகளிலும் சுடுகாட்டிலுமே தேட வேண்டி இருக்கும்.

www.tamilarangam.net

..... வரலாற்று உண்மைகள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு ..... தமிழ் நாட்டினம் அடிமை இனமாகத் தாழ்த்தப்பட்ட படியாலும் சுதந்திரம் பெற்ற நாள் முதல் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசாங்கங்கள் எல்லாம் சிங்கள மக்களின் தீவிர இனவாதத்தை தூண்டி வளர்த்து தமது அரசியல் அதிகாரத்தை தமிழ் மக்களுக்குப் பாதகமாக பயனபடுத்திய படியால் இலங்கைவால் தமிழ் மக்கள் சிங்களவரில் இருந்து வேறுபட்ட ஒரு தனிநாட்டினம் என்று இத்தால் பிரகடனப்படுத்துகிறது. ..... இத்தீவில் உள்ள தமிழீழ நாட்டினத்தின் நிலையான வாழ்வை பாதுகாப்பதற்கு; ஒவ்வொரு நாட்டினத்திற்கும் உரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு சுதந்திர இறைமையுள்ள மதச் சார்பற்ற சோசலிச தமிழீழ அரசை மீள்வித்து புனரமைப்புச் செய்வது தவிர்க்க முடியாததாகி விட்டது என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

வட்டுக்கோட்டைத் தமிழீழப் பிரகடனம் 14 மே 1976 [1]

த ஜெயபாலன்

## பிரபாவின் சொற் பிரிவு

# வட்டுக்கோட்டையிலிருந்து வன்னி வரை

1976ல் யாழ் வட்டுக்கோட்டையில் பண்ணாகம் என்ற குக்கிராமத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி "சோசலிச தமிழீழ அரசை மீள்வித்து புனரமைப்புச் செய்வது தவிர்க்க முடியாததாகி விட்டது"[1] என்ற தீர்மானத்தை எடுத்தது. இதன் பின் 30 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. இந்த இடைப்பட்ட காலத்தில் 70,000க்கும் மேற்பட்ட மக்களையும் பல நூறு லட்சம் பெறுமதியான சொத்துக்களையும் இழந்து விட்டு சர்வதேச சமூகத்தில் இருந்தும் ஒதுக்கப்பட்ட நிலையில் இலங்கைத் தமிழ் சமூகம் இன்று உள்ளது.

இந்நிலையில் வன்னியின் பெயர் குறிப்பிடப்படாத ஒரு இடத்தில் இருந்து 2006ல் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் "தமிழர்களின் தேசியப் பிரச்சினைக்கு சிங்களத் தலைவர்கள் நீதியான தீர்வினை ஒருபோதுமே முன்வைக்கமாட்டார்கள் என்பது இன்று தெட்டத் தெளிவாகியுள்ளது" என்று தனது மாவீரர் உரையில் குறிப்பிட்டு உள்ளார். "சிங்களப்பேரினவாதத்தின் கடுமையான போக்கு, தமிழீழ மக்களுக்கான தனியரசு என்பதைத்தவிர வேறு ஒரு தெரிவினையும் விட்டு வைக்கவில்லை" எனத் தொடர்ந்து தனது உரையில் அவர் குறிப்பிட்டு உள்ளார்.

1976ல் முன்வைக்கப்பட்ட தமிழீழப் பிரகடனத்திற்கும் 2006ல் பிரபாகரனின் மாவீரர் உரைக்கும் அடிப்படையில் எந்த வேறுபாடும் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழ் ஊடகங்கள் குறிப்பிடும் அளவுக்கு மாவீரர் தின உரை முக்கியத்துவமானதாகவும் இருக்கவில்லை. "the speech, which

### 2006 முதல் 1992 வரை மாவீரர் உரைகளில் சொல்லப்பட்ட செய்தி என்ன:[5]

சிங்கள ஆட்சியாளர்கள் தமிழரின் தேசியப் பிரச்சினைக்குச் சமாதான வழியில் ஒரு நியாயமான தீர்வை ஒரு போதும் முன் வைக்கப்போவதில்லை என்பது இன்று வெட்ட வெளிச்சமாகி யிருக்கிறது. எனவே சுதந்திரத் தமிழீழத் தனியரசை நிறுவுவதென இன்றைய நாளில் நாம் தீர்க்கமாக முடிவு செய்திருக்கிறோம்.

நவம்பர் 2006

நியாயமான தீர்வுத் திட்டத்தை அரசாங்கம் முன் வைக்க வேண்டும். காலத்தை இழுத்தடிக்க முற்படுமானால் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை எமது தாயகத்தில் தன்னாட்சியை நிறுவும் போராட்டத்தை தீவிரப்படுத்துவோம்.

நவம்பர் 2005

நாம் முன் வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தின் அடிப்படையில், நிபந்தனையற்ற முறை

www.tamilarangam.net

in theme varies little from the statements of previous years"[2] அந்த உரையின் சாரம்சம் கடந்த ஆண்டுகளின் உரைகளில் இருந்து சிறிதளவே மாறுபட்டு உள்ளதாக வோசிங்டன் போஸ்ட் தனது ஆசிரியர் தலையங்கத்தில் கூறுகிறது. அவ்வுரை பெரும்பாலும் கடந்த காலத்தின் குறிப்பாக சென்ற வருடத்தின் நிகழ்வுகளின் தொகுப்பாகவே அமைந்தது. இலங்கை அரசாங்கம் (அரசாங்கங்கள்) மீது கடுமையான குற்றச்சாட்டுகளை வைத்துள்ள வி.புலிகளின் தலைவர் பிரபா, தனது அமைப்பின் கொள்கை அல்லது எதிர்காலம் பற்றி குறிப்பிடுகையில் சிங்களப் பேரினவாதம் தங்களை தமிழீழ அரசை நிறுவ நிர்ப்பந்திப்பதாகத் தெரிவித்து உள்ளார். இதனையே கூட்டணியினர் துப்பாக்கிகளும் குண்டுகளும் இல்லமல் வெறும் ஒலிவாங்கியைப் பிடித்துக் கொண்டு பண்ணாகத்தில் முழங்கினர்.

பிரபாவின் உரையை புலம்பெயர்ந்த தமிழர்களின் ஒரு பிரிவினர் மத்தியில் விற்க முடிந்தாலும் சர்வதேச சமூகம் அதனை ஏற்றுக் கொள்வதாக இல்லை. "Prabhakaran's argument, more propaganda than fact, that the Tigers have worked for peace but been forced to fight is based on a series of false premises, and is an attempt to win sympathy and support from the international community"[2] வி.புலிகள் சமாதானத்திற்காக உழைத்தார்கள் ஆனால் அவர்கள் யுத்தத்திற்கு நிர்ப்பந்திக்கப்பட்டு உள்ளார்கள் என்ற பிரபாகரனின் வாதம் உண்மையின் அடிப்படையில் அல்லாமல் சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெறுவதற்கான பிரச்சாரத் தன்மையையே கொண்டுள்ளது என அந்த ஆசிரியர் தலையங்கம் மேலும் தெரிவிக்கிறது.

1982 நவம்பர் 27ல் தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் போராளி லெப்.சங்கர் உயிரிழந்ததன் ஞாபகார்த்தமாக உயிரிழந்த (விதைக்கப்பட்ட) வி.புலிகள் அனைவரதும் தினமாக மாவீரர் தினம் நினைவு கூரப்படுகிறது. இது வி.புலிகளின் நாட்காட்டியில் ஒரு முக்கிய தினமாகும். உத்தியோகபூர்வமாக பிரபாவின் வருடாந்த அறிக்கையும் இத்தினத்தில் வெளியிடப்படுவதால் இந்நாள் வி.புலிகளைப் பொறுத்த வரை மிக முக்கிய தினமாக அமைகிறது. அதற்கு முதல்நாள் பிரபாவின் பிறந்த தினம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நவம்பர் 20, 2006 வரையான 24 ஆண்டுகளில் வி.புலிகள் அமைப்பில் 18,742[3] போராளிகள் உயிரிழந்து உள்ளனர். (ஈரோஸ் போராளிகளும் உள்ளடக்கம்) சமாதான ஒப்பந்தத்தில் இருந்து இலங்கை அரசோ வி.புலிகளோ விலகாத நிலையில் கடந்த வருடம் மட்டும் 818[3] விடுதலைப் புலிகள் உட்பட 3400 பேர் உயிரிழந்து உள்ளனர்.

1992 முதலே பிரபாவின் மாவீரர் தின உரைகள் பதிவில் உள்ளது. இந்த 15 மாவீரர் தின உரைகளுமே

யில், காலம் தாமதிக்காது பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள்விடுகிறோம். எமது இந்த அவசர வேண்டுகோளை நிராகரித்து, காலத்தை இழுத்தடித்தால் நாம் எமது தேசத்தின் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதைத் தவிர வேறுவழியில்லை.

நவம்பர் 2004

சமரசத்திற்கும் சமாதான முன்னெடுப்புகளுக்கும் எம்மால் முடிந்தளவு நாம் முயற்சித்து வருகிறோம். சிங்கள இனவாத ஆளும் வர்க்கம் தொடர்ந்தும் எமது மக்களின் உரிமைகளை மறுத்து, சமரசத் தீர்வுகளை எதிர்த்து ஒடுக்கு முறையைத் தொடருமானால் தனியரசைக் கட்டி எழுப்புவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை.

நவம்பர் 2003

நம்பிக்கையூட்டும் நல்லெண்ண சூழ்நிலையில், அரசு - புலிகள் மத்தியிலான பேச்சுக்கள் முன்னேற்றம் அடைந்து செல்வது எமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. காலத்திற்கு ஏற்ப, வரலாற்றுக் கட்டாயத்திற்கு அமைய எமது போராட்டத்தின் வழிமுறைகள் மாறலாம் ஆனால் எமது போராட்ட லட்சியம் மாறப்போவதில்லை. சுமாதானச் பேச்சுக்களை பேரினவாத சக்திகள் குழப்பிவிட்டால், அது தமிழ் மக்களைத் தனியரசுப் பாதையில் இட்டுச் செல்லும்.

நவம்பர் 2002

பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதாயின் எமது இயக்கம் மீது விதிக்கப்பட்டு உள்ள தடை நீக்கப்பட வேண்டும். போர் நெருக்கடிகளும் பொருளாதாரத் தடைகளும் நீங்கிய இயல்பான இயல்பான அமைதியான சூழ்நிலையில் தான் பேச்சுக்கள் நடைபெற வேண்டும். தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு சமாதான வழிமூலம் தீர்வு காணப்பட்டால் தமிழர்களும் சிங்களவர்களும் ஏனைய சமூகத்தினரும் இந்த அழகிய தீவில், ஒத்திசைவாக, ஒன்றுகூடி வாழ முடியும். மறுத்தால் தமிழர்களாகிய நாம்

www.tamilarangam.net

வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் பெரும்பாலும் ஒரே மாதிரியானவையாகவே இருந்துள்ளது. அவ்வுரையில் வெளியிடப்படும் செய்திகளிலும் எந்த மாற்றங்களும் பெரிதாக இருப்பதில்லை.

நாங்கள் வரலாற்றில் முக்கியமான காலகட்டத்தில் நிற்கிறோம், வரலாற்றின் திருப்பு முனையில் நிற்கிறோம், சிங்கள அரசாங்கங்கள் எங்களை ஏமாற்றிவிட்டன, சிங்கள பேரினவாத அரசுகள் பிரச்சினைக்கு தீர்வு காணப் போவதில்லை, நாங்கள் போராட, தனியரசு அமைக்க, தமிழீழம் நிறுவ தள்ளப்பட்டு உள்ளோம், இதனைத் தவிர வேறுவழியில்லை - இவையே அந்த 15 வருட உரையிலும் உள்ளது.

2007 மாவீரர் தின உரையில் பிரபா என்ன சொல்லப் போகிறார் என்பதை ஒரு சில மாவீரர் தின உரைகளை வாசித்த இடைநிலைப் பள்ளி மாணவனால் எழுதிவிட முடியும். இதற்கு அரசியல் ஆலோசகர்களும் மதியுரைஞர்களும் அவசியமில்லை.

இந்த மாவீரர் தின உரைகளையும் மற்றும் பிரச்சார சாதனங்களையும் பயன்படுத்தி தமது போராட்ட வடிவங்களை மாற்றியமைத்து வி.புலிகள் தமது இலக்கில் பல மைக்கல்களைத் தாண்டியிருக்க முடியும். ஆனால் ஆயுதத்தில் மட்டுமே வைத்ததுள்ள அந்த அபார நம்பிக்கை அவர்களை மக்கள் சக்திகளிடம் இருந்து தனிமைப்படுத்தி உள்ளது.

தமிழ் - சிங்கள, தமிழ் - முஸ்லீம் மக்களிடையே இனவாதத்தைக் கூர்மைப்படுத்தி அதன் நிழலில் அரசியல் மேற்கொள்ளும் ஒரு முதலாளித்துவ எதேச்சதிகாரப் போக்கே வி.புலிகளிடம் காணப்படுகிறது. சிங்கள பேரினவாத முதலாளித்துவ அரசுக்கு எந்த வகையிலும் குறையாத ஒரு அதிகார அமைப்பாகவே வி.புலிகள் தம்மை கட்டியமைத்துள்ளதால் தமிழ் மக்களின் நியாயமான விடுதலைப் போராட்டம் அதன் நியாயத் தன்மையை சர்வதேசத்தின் மத்தியில் இழந்துள்ளது. இந்தத் தவறிற்கு தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக வலிந்து நிற்கும் வி.புலிகளே பொறுப்பேற்க வேண்டும்.

தமிழகத்தில் தனிமுகம் தேடும் சில அரசியல் கட்சிகளின் அரசியில் லாபங்களுக்கு நன்றி தெரிவித்து ஆதரவைக் கோரும் பிரபா தனதருகில் வாழும் சிங்கள, முஸ்லீம் மக்கள் விடயத்தில் தொடர்ந்தும் மௌனமாகவே உள்ளார்.

ஆனால் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கிகரிக்கப்பட வேண்டும் என்ற பிரேரணை, 1978ல் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் காலி மாநாட்டில் பெரும்பான்மை இனத்தவரும் சங்கத்தின் தலைவருமான எச் என் பெர்னான்டோவால் முன் வைக்கப்பட்டு பெரும்பான்மை இனத்தவர்கள் அதி பெரும்பான்மையாக இருந்த சபையால்

பிரிந்து சென்று தமிழீழத் தனியரசை அமைப்பதைத் தவிர எமக்கு வேறு வழி எதுமில்லை.

நவம்பர் 2001

சமாதான பேச்சுக்கு உகந்ததாக சமாதான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். சிங்கள தேசம் இனவாதப் பிடியிலிருந்து விடுபடாமல் தமிழர்களுக்கு எதிரான அடக்கு முறையைத் தொடருமானால் நாம் பிரிந்து சென்று தமிழீழத் தனியரசை அமைப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை.

நவம்பர் 2000

சுதந்திர தமிழீழ தனியரசே எமது தேசிய பிரச்சினைக்கு இறுதியான உறுதியான தீர்வு என்பதை எமது மக்கள் எப்பொழுதோ தீர்மானித்துவிட்டார்கள். எமது போராட்ட இலக்கு ஒளிமயமான எதிர்காலமாக எமது கண்களுக்குத் தெரிகிறது. நாம் நம்பிக்கையுடன் எமது இலட்சியப் பயணத்தைத் தொடர்வோம்.

நவம்பர் 1999

தமிழீழத் தனியரசே தமிழ் மக்களின் இறுதியான தீர்வாக அமையுமென உறுதியாக நம்பி நாம் எமது லட்சியப் போரைத் தொடருவோம்.

நவம்பர் 1998

இராணுவ வன்முறைப் பாதையைக் கைவிட்டு சிங்களம் தமிழ் மக்களுக்கு நீதி வழங்குமென நாம் எதிர்பார்க்கவில்லை. நாம் எமது விடுதலை இலட்சியத்தை அடைய தொடர்ந்து போராடுவோம்.

நவம்பர் 1997

ஆக்கிரமிப்புப் படைகளை எமது மண்ணில் இருந்து வெளியெற்றும் வரை எங்கள் தேசம் விடுதலை அடையும் வரை தொடர்ந்தும் போராடுவோம்.

நவம்பர் 1996

தமிழ் தேசத்திற்கான இராணுவ பலத்தை கட்டமைப்பது தவிர்க்க முடியாதது. இன்றைய வரலாற்றின் தேவையும் கூட.

www.tamilarangam.net

ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும் தமிழீழ விடுதலைப் போரட்டத்தின் ஆரம்ப காலங்களில் முஸ்லீம் மக்களும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தமக்கான போராட்டமாகவும் கருதினர். பல முஸ்லீம் இளைஞர்கள் தம்மை விடுதலை அமைப்புகளுடனும் இணைத்துக் கொண்டனர். ஆனால் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதியாக ஏக தலைவராகக் கூறிக்கொள்ளும் பிரபாவிடம் இவர்களுக்குச் சொல்ல எதுவும் இருக்கவில்லை.

அரசு - அரசாங்கம் - மக்கள் இம்மூன்றும் ஒன்றல்ல என்ற பாடத்தை வி.புலிகள் கற்க தயாராகவில்லை. அவர்களைப் பொறுத்தவரை சிங்களம் (அரசு - அரசாங்கம் - சிங்கள மக்கள்) - தமிழ் (புலிகள் - அரசாங்கம் - தமிழ் மக்கள் இதற்குமேல் அவர்கள் செல்லத் தயாராகவில்லை. விரும்பவில்லை.

தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் சமகாலத்தில் போராடிய நேபாள் மாவோயிஸ்ட்களின் போராட்டம், இந்தோனேசியாவின் ஆச்சே விடுதலைப் போராட்டம் என்பன பேச்சு வார்த்தைக்கூடான அரசியல் தீர்வை நோக்கி நகர்ந்துள்ளன. தமது போராட்ட வடிவங்களையும் அவர்கள் மாற்றி உள்ளனர். ஆனால் வி.புலிகளிடம் சமாதான காலத்தில் அரசியல் செய்யும் அரசியல் பலம் புஜ்ஜியம் ஆகவே உள்ளது. சமாதான காலத்திலேயே வி.புலிகள் அதிகப்படியான நாடுகளால் தடை செய்யப்பட்டு உள்ளனர். பெரும்பாலும் அனைத்து மனித உரிமை அமைப்புகளினதும் கண்டனத்திற்கும் உள்ளாகி உள்ளனர்.

சென்ற தேசம் இதழின் ஆசிரியர் தலைப்பில் குறிப்பிட்டிருந்தது போல "தமிழீழத்திற்கு மாற்றான ஒரு தீர்வுக்குச் செல்வது வி. புலிகளுக்கும் அதன் தலைமைக்கும் தற்கொலைக்குச் சமனானது. இன்று வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் மீது ஒட்டுமொத்தமான அதிகாரத்தைக் கொண்டிருக்கும் வி.புலிகள் தமிழீழம் தவிர்ந்த மாற்றுத் தீர்வுக்குச் செல்வதன் மூலம் பன்மைத்துவ அரசியலில் அதிகாரங்களைப் பகிர நிர்பந்திக்கப்படுவார்கள். அவர்களுடைய அரசியலும் தலைமையும் கேள்விக்கும் விமர்சனங்களுக்கும் உட்படுவதற்கான வாயில்களை அது திறந்துவிடும். ஆகவே முப்படைப் பிரிவுகளைக் கொண்டிருக்கும் உலகின் செல்வந்த இயக்கமான வி.புலிகளுக்கு தமிழீழம் மட்டுமே தீர்வாக முடியும்." [4] மாற்றுத் தீர்வை ஏற்பதும் சமாதான அரசியலும் வி.புலிகளையும் அதன் தலைமையையும் அழிவுக்கே இட்டுச் செல்லும். ☑

## தகவல் மூலம்:


1. புஸ்பராஜாவின் ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம் பக். 216
2. வோசிங்டன் போஸ்ட் Terrifying 'heroes' November 29, 2006
3. TamilNet, 26 November 2006
4. தேசம், தேசத்தின் பார்வை, இதழ் 28
5. tamilnation.org


இளம் தலைமுறையினர் தாமதமின்றி எமது விடுதலை இயக்கத்தில் இணைய வேண்டுமென்று அழைப்பு விடுக்கிறேன். எவ்வளவு விரைவில் அவர்கள் வந்து இணைகிறார்களோ அவ்வளவு விரைவில் எங்கள் போராட்டத்தின் இலக்கை நாம் அடைய முடியும்.

நவம்பர் 1995

தமிழ் மக்களுடைய தேசியப் பிரச்சனைக்கு சமாதானத் தீர்வைக் காணுவதற்கான அடிகளை எடுத்தால் நாங்கள் சந்திரிகா அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்.

நவம்பர் 1994

சுதந்திர நாட்டை பெற்றுத்தர மக்களின் ஆணையைப் பெற்ற தமிழ் அரசியல் கட்சிகளும் அரசியல் சுதந்திரத்தைப் பெற்றுத் தருவதாக போராடிய ஆயுதக் குழுக்களும் தமது போராட்டத்தைக் கைவிட்டுள்ளன. மக்களுக்கு நம்பிக்கைத் துரோகம் இழைத்துள்ளன. எங்கள் இயக்கம் மட்டுமே கொள்கையில் தொடர்ந்தும் உறுதியாக உள்ளது.

எமது போராட்டத்தின் உணர்வுபூர்வமான நோக்கம் மட்டும் வெற்றியைப் பெற்றுத் தராது. எங்கள் தீர்மானத்தில் நாங்கள் பலமாக உறுதியாக இருக்க வேண்டும். போர்க் கலையில் திறமையானவர்களாக இருக்க வேண்டும்.

நவம்பர் 1993

இந்த மிக முக்கியமான கடினமான நிலையில் நாங்கள் என்ன செய்ய முடியும்? எங்களுடைய மக்களையும் மண்ணையும் காப்பாற்றுவதற்கு போராடுவதைத் தவிர வேறுவழி உண்டா? எங்கள் சுதந்திரத்தை வெற்றி கொள்ள நாங்கள் போராட வேண்டும். பேரம் பேசுவதற்கு சுதந்திரம் விற்பனைப் பொருளல்ல. அது எமது உரிமை இரத்தம் சிந்தியே அதனை வெற்றி கொள்ள முடியும்.

எதுவும் யாரும் எங்களைத் தடுக்க முடியாது. நாங்கள் தொடர்ந்தும் உறுதியுடன் போராடுவோம்.

நவம்பர் 1992



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எஸ்.எம்.எம்.பஷீர்

# புலிகளின் நான்காம் ஈழப்போருக்கான முஸ்தீபும் முஸ்லீம்கள் மீதான இரண்டாம் இனச் சுத்திகரிப்புக்கான ஒத்திகையும்

தம் தாயகப் பிரதேசமான யாழ்குடாவில் இருந்து புலிகளால் பலவந்தமாக வெளியேற்றப் பட்டதை கவனயீர்ப்பு ஊர்வலம் மூலம் முஸ்லீம் மக்கள் நினைவு கூர்ந்தனர். கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் டிசம்பரில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கலந்தகொண்ட மக்கள் நிரந்தர சமாதானத்தை அடைய அரசையும் புலிகளையும் வலியுறுத்தினர்.

மறுபுறம் மாவீரர் தின உரையில் தமிழர்கள் மீதான சிங்கள அடக்குமுறை குறித்து புலிகளின் கரிசனையை பிரபாகரன் வெளிப்படுத்தினார். அதுபோல் புலிகளின் முஸ்லீம்கள் மீதான அடக்கு முறையினையும் பிரதியீடு செய்யும் சந்தர்ப்பமும் ஏற்படுகிறது. குறிப்பாக மூதூரை ஒரு பிரம்மாண்டமான வதைமுகாமாக மாற்றிய புலிகளின் அடக்குமுறை புலிகளின் முஸ்லீம்கள் மீதான அடக்குமுறையின் கிட்டிய உதாரணமாகும். எனினும் காலியிலும் மூதூரிலும் தமிழர்கள் மீதான பதில் தாக்குதல்களை பாரிய அளவில் எதிர்பார்த்த புலிகளின் தோல்வியும் இவ்வுரையில் புலப்படாமல் இல்லை.

எந்தத் திருமலையில் 1960களில் முஸ்லீம் அரசும் தமிழ் அரசும் என இரு அரசுகள் குறித்து தந்தை செல்வா பிரகடனம் செய்தாரோ அந்தப் பிரதேச மக்கள் புலிகளின் இனச்சுத்திகரிப்பின் கெடுபிடிகளுக்கு உள்ளாகி துயர்பட்டனர். மேலும் கிழக்கிலே ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பிரதேச சபைகள் குறித்து பல்லின சூழலை கருத்தில் கொண்டு பண்டா - செல்வா ஒப்பந்தம் செய்த தந்தை செல்வாவின் கருத்துக்கள் இன்று தீர்க்கதரிசனமாக புலப்படுகையில் காலாவதியான தனித் தமிழீழவரசு சிந்தனைகளில் பிரபாகரன் இன்னும் மூழ்கியிருக்கிறார். சுயநிர்ணய உரிமை கோரும் சமூகங்களை கிள்ளுக்கீரை என நினைத்திருக்கிறார்.

மேலும் இருகட்சி இணக்கப்பாடு குறித்து பொம் மலாட்டம் எனக் கேலி செய்யும் பிரபாகரனுடன் இவ்விணக்கப்பாடினை ஒரு ஜோடனை என எண்ணி வசதிக்கேற்ப சிங்கள பேரினவாதம் பேசுகிறார் றவூப் ஹக்கீம். இந்த றவூப் ஹக்கீமும் ஒப்பந்தங்கள் மூலமாக சிங்கள பேரினவாத ஆட்சியாளர்களுடன் சமரசம் செய்து கொள்கின்ற பிரபாகரனும் தங்களது சமூகங்களின் ஏகப்பிரதிநிதிகள் எனத் தங்களைத் தாங்களே பறைசாற்றுகின்றனர். இவர்கள் தனிமனித சமூகப் பலவீனங்களில் சூழ்ந்திருக்கின்ற மக்களினை ஆதாரமாக கொண்டு உயிர்வாழ்கின்றனர். அதனால் தெற்கிலே சிங்கள தலைமைகள் புதிய ஆரோக்கியமான திசையில் பயணிப்பதற்கான சூழ்நிலை ஏற்படுவதைக் கண்டு கிலி கொண்டு உள்ளார்கள்.

முஸ்லீம்கள் குறித்து ஒரு வார்த்தை தானும் பிரபாகரனின் மாவீரர் உரையில் குறிப்பிப்படவில்லை. இது பிரபாகரனின் அல்லது புலிகளின் மமதையினையும் மறுபுறம். இப்போக்கு முஸ்லீம்களை தாக்குவது என்பது தமதுரிமை என புலிகள் வக்கிரமாக செயற்படுகின்ற கொடூரத்தினையும் உள்ளடக்கி இருக்கிறது.

புலிகள் 1990 அக்டோபரில் வடமாகாண முஸ்லீம்களை விரட்டியடித்து கிழக்கு மாகாண முஸ்லீம்களைத் தெட்டம் தெட்டமாக அதே ஆண்டிலே ஆங்காங்கே கொன்றழித்தனர். இவ்வாறு முஸ்லீம்கள் மீதான இனப் படுகொலை யினையும் (genocide) இனச் சுத்திகரிப்பையும் (ethnic cleansing) அரங்கேற்றினர். அதன் பின்னர் இலாப நட்டக் கணக்கினை, உலக அரசியல் பின்னணிகளுடன், மாற்றங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து புதிய உபாயங்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஒத்திகைதான் மூதூர் மீதான புலிகளின் முற்றுகை. அதன் விளைவாய் நிகழ்ந்த முஸ்லீம்களின் பாரிய வெளியேற்றம். திட்டமிட்ட முஸ்லீம் இளைஞர்கள் மீதான படுகொலை.

மாவிலாறும் மூதூரின் மீதான புலிகளின் முற்றுகையும் காரணகாரியத் தொடர்பற்றவை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. மூதூர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏப்ரல் 14, 2002ல் றவுப் ஹக்கீமும் பிரபாகரனும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்கின்றனர்

முஸ்லீம்கள் தங்களது அரசியல் தனித்துவத்தைப் பேணி வந்துள்ளனர். அதுமட்டுமல்ல திருக் கோணமலை மாவட்டத்திலுள்ள முஸ்லீம்களும் பல்வேறுபட்ட புலிகளின் நெருக்கடிக்கு மத்தியில் தமது தனித்துவத்தை நிலைநாட்டிவந்து உள்ளனர். இது புலிகளை மிகவும் ஆத்திரமூட்டி வந்திருக்கின்றது. குறிப்பாக, சமாதானகாலச் சூழ்நிலையில் புலிகளுக்கும் மூதூர், தோப்பூர் முஸ்லீம்களுக்குமிடையிலான முரண்பாடுகள், அவை தோற்றுவித்த சிறுசிறு தமிழ்-முஸ்லீம் கலவரச் சூழ்நிலைகள் என்பவற்றினூடாகக் இதனைக் காணமுடிகின்றது.

போர்நிறுத்த ஒப்பந்தத்துடன் 2002ம் ஆண்டு ஆரம்பத்திலேயே முஸ்லீம்கள் மீதான புலிகளின் கட்டாயப் பணப்பறிப்பு, ஆட்கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்றது. இதன் எதிர்விளைவுகள், மார்ச் 2003 இல் பாரிய அளவில் ஆர்ப்பாட்டமாக, கலவரமாகமாறியது.இக்கலவரங்களின்எதிரொலி, வாழைச் சேனையிலும் பிரதிபலித்தது. புலிகளின் முஸ்லீம் எதிர்ச் செயற்பாடுகள் தமிழ்-முஸ்லீம் மக்களை இன முரண்பாடுகளுக்குள் தள்ளியது. பரஸ்பர சந்தேகமும் அச்சமும் அவர்களது இன சௌஜன்யத்திற்குத் தடையாக அமைந்தன.

புலிகளின் ஊதுகுழல்கள், உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும் முஸ்லீம் ஊர்காவற்படையினர் அடிப்படை வாதக் குழுக்கள் என்று முஸ்லீம்கள்மீது பழிசுமத்தின. அத்துடன் தங்களது (புலிகளது) முஸ்லீம்கள் மீதான வன்முறைகளுக்கு மூன்றா வது சக்திதான் காரணமென்றும் குற்றஞ்சாட்டி வந்தன. இதற்கு முட்டுக்கொடுப்பது போல புலிகளின் வெற்றியிலேயே முஸ்லீம்களின் அரசியல் வெற்றியும் (win win situation) தங்கியுள்ளதென சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் றவுப் ஹக்கீம் விடுத்த அறிக்கை அமைந்தது. சமாதானத்திற்குத் தடையாக முஸ்லிம்களிலும் ஒரு பகுதியினர் (தீவிரவாத) செயற்படுவதாக றவுப் ஹக்கீம் குறிப்பிட்டமையினை புலிகளின் ஊடகங்கள் இன்றுவரை இழுத்துப் பிடித்துக் கொண்டுள்ளன.

இந்தக்காலப் பகுதியில்கூட பரஸ்பரமாகத் தமிழ்-முஸ்லீம் மக்கள் அகதிகளாகத் தலா சுமார் 150 குடும்பங்கள் மட்டக்களப்புக்கும் கந்தளாய்க்கும் முறையே இடம்பெயர்ந்தனர். மேலும் இந்தக் காலப்பகுதியிலே மூதூர் கிழக்கு மக்கள் தாக்கியபோது கொல்லப்பட்ட இரண்டு புலி உறுப்பினர்களான சங்கர் என அழைக்கப்படும் மகேஸ்வரன், குட்டி என அழைக்கப்படும் தர்மலிங்கம் கமலநாதனின் எட்டாம் நாள் ஞாபகார்த்தநிகழ்வின்போதுவெளியிட்டதுண்டுப் பிரசுரத்தில் முஸ்லீம்களை விழித்து, சங்கரினதும் குட்டியினதும் மரணம் விதைக்கப்பட்டிருப்பதாக வும், அவர்களது விளைச்சலால் மூதூர் மக்கள் விரட்டி அடிக்கப்படுவார்கள் என்றும் குறிப்பிடப்பட்டு இருந்தது. அன்று தொடக்கம் மூதூர் முற்றுகை வரை பல துண்டுப் பிரசுரங்கள் புலிகளின் முகவர் நிறுவனங்களால் வெளியிடப்பட்டன. அவ்வப்போது சமாதான ஒப்பந்தங்கள் புலிகளுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே (பள்ளிவாசல் நிர்வாகிகள்) ஏற்படுத்தப் பட்டாலும் அவை வெறும் காகிதங்களாக நடைமுறையில் மதிக்கப்பட்டன என்பதற்கு மூதூரில் நிகழ்ந்த அண்மைய நிகழ்வு முடிவான ஒன்றாக அமைகின்றது.

முஸ்லீம் ஆயுதக் குழுவினர் தோற்றம் பெறுவதாகவும் அவர்கள் கருணா குழுவினர் போல் தங்களது தமிழீழத் தாயகத்திற்கு அச்சுறுத்தலாக அமைவார்கள் என்ற பரப்புரைகளை புலிகள் மேற்கொள்வதில் தீவிரம்காட்டினர். ஏனெனில் தாங்கள் செய்யப் போகின்ற செயற்பாடுகளை தமிழீழத்தின் இறுதி இலக்காக அல்லது முடிவான தீர்வாகக் கருதுகின்ற தமிழ் மக்களை (புலம்பெயர்ந்தவர்கள்) சங்கடத்திலாழ்த்தாமல் நியாயப்படுத்தும் மனப்பாங்கினைத் தோற்று விக்கின்ற வகையில் இப்பரப்புரைகள் மேற் கொள்ளப்பட வேண்டி இருந்தது. குறிப்பாக காத்தான்குடி, ஏறாவூர், அழிஞ்சிப்பொத்தானை படுகொலைகளும் வட மாகாண வெளியேற்றமும்

www.tamilarangam.net

இப்பரப்புரைகளின் பின்னணியிலேயே இடம் பெற்றது. மறுபுறம் முஸ்லிம்களை இன்று மேற்கு உலகு பயங்கரவாதிகளாகக் காட்டும் போக்கை புலிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றனர்.

இன்று கிழக்கின் தனித்துவம் குறித்து எழுந்துள்ள அரசியல் - இராணுவ நடவடிக்கைகளும் கிழக்கு முஸ்லீம்கள் மீது புலிகளை சந்தேகம் கொள்ளவைத்துள்ளது. எனவே மூதூர் முஸ்லீம்கள் மீதான முற்றுகை மூலம் புலிகள் கிழக்கு முஸ்லீம்களை கிலிகொள்ள வைத்துள்ளனர். மேலும் ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள் என இராணுவத்தினரைக் கொண்டே முஸ்லிம்கள் மீதான தாக்குதலையும மேற்கொண்டுள்ளனர். மறுபுறம் தங்களுக்கெதிராக குரல் எழுப்பும் இளைஞர்களை அடையாளம் கண்டு அழித்து ஒழித்தும் உள்ளனர். இவற்றினைச் செய்வதற்கான அகப்புறச் சூழ்நிலைகளை தந்திரோபாயமாகச் செய்து முஸ்லிம்களை வெளியேற்றினர்.

இந்த அதிரடி நடவடிக்கை எதிர்காலத்தில் கிழக்கு முஸ்லிம்கள் மீதான தங்களின் தாக்குதலுக்கு, தங்களது இராணுவ பலத்திற்கு எடுத்துக்காட்டாக செய்யப்பட்டதாகும். மேலும் திருக்கோணமலைத் துறைமுகத்தினை இலங்கை இராணுவம்தக்கவைத்திருக்கின்றமூதூரைச்சார்ந்த கிராமங்கள் யாவற்றினையும் கட்டுப்படுத்திக் கொண்டு வருகின்ற செயற்பாடுமாகும்.

எவ்வாறெனினும் இலங்கை அரசு இராணுவ எதிர்த்தாக்குதல்கள், கள நிலை யதார்த்தங்கள் புலிகளைப் பின்வாங்கச் செய்திருக்கின்றன. தங்களைப் புலிகள் பாதுகாப்பார்கள் என்ற நம்பிக்கையிலிருந்த மூதூர் தமிழ் மக்களும் அகதிகளாகக் காட்டுப் பிரதேசங்களினூடாக அழிவுகளைச் சந்தித்தே இடம்பெயர்ந்தார்கள். சேருவில சிங்கள மக்களும் மூதூர் முற்றுகை தொடங்கும் முன்னரே மாவிலாறு பிரச்சினை சூடுபிடிக்கத் தொடங்கவே இடம்பெயர்ந்தனர். ஒட்டுமொத்தமாக தமிழ், முஸ்லிம் சிங்கள மக்களின் வெளியேற்றம் அதிலும் முஸ்லிம் மக்களிடம் கொள்ளையிட்டமை, முற்றுகையிட்டுத் துன்புறுத்தியமை முஸ்லிம் இளைஞர்களைக் கடத்திக் கொன்றமை, தங்களது தந்திரோபாயத்தால் இராணுவத்தின்மீது முஸ்லிம்கள் அகதிகளாய் தஞ்சமடைந்திருந்த இடங்களிலிருந்தே தாக்கியமை, மறுபுறம் புலிகளின் பின்வாங்கிய நகர்வுகள் தமிழர்களையும் இராணுவத் தாக்குதல்களுக்குட்படுத்தி உள்ளது.

மொத்தத்தில் புலிகளின் தன்முனைப்பான மூதூர் முற்றுகை முஸ்லிம்களை மட்டுமல்ல தமிழர்களையும் பாதித்திருக்கிறது. முஸ்லிம் களைப் பொறுத்தளவில் மீண்டும் ஒரு இனப் படுகொலையும் இனச்சுத்திகரிப்பும் அரங்கே கற்றப்பட்டிருக்கின்றது. ஒருபுறம் புலிகளும், மறுபுறம் இராணுவமும் பொதுமக்களை அழிவுக்குட்படுத்தி இருக்கின்றன. இலங்கை அரசு தனது மக்களை பாதுகாக்க வேண்டிய தார்மீகக் கடமையிலிருந்து தப்பிவிடமுடியாது. சகல மனித அழிவுகளும் கேள்விக்கு உட்படுத்தப்பட வேண்டும். மூதூரிலிருந்து இடம்பெயர்ந்த தமிழ் முஸ்லிம் மக்கள் மீண்டும் ஒன்றாக வாழவே விரும்புகின்றார்கள். ☑

## தேசம் அறிவித்தல்

அன்புடன் வாசகர்களுக்கு,

சென்ற தேசம் இதழைத் தபாலில் பெற்றுக் கொண்ட வாசகர்கள் சிலருக்கு வீணான அசௌகரியம் ஏற்படுத்தப்பட்டமைக்கு தேசம் நிர்வாகம் தனது மனவருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

எமது விநியோகப் பிரிவினர் அண்மையில் தபால் கட்டணத்தில் ஏற்பட்ட மாற்றத்தை கவனத்திற் கொள்ளாததாலேயே இவ் அசௌகரியம் ஏற்பட்டது.

எதிர்காலத்தில் இவ்வாறான அசௌகரியங்களை தவிர்ப்பதற்கான சகல முயற்சிகளையும் நாம் மேற்கொள்வோம் என உறுதியளிக்கிறோம்.

தேசம் நிர்வாகம்.

அன்புடன் வாசகர்களுக்கு,

அண்மையில் தபால் கட்டணங்களில் ஏற்பட்ட மாற்றங்களை நீங்களும் அறிந்திருப்பீர்கள். தொடர்ந்தும் சஞ்சிகையை இலவசமாக அனுப்பி வைப்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்பதை உங்களால் விளங்கிக் கொள்ள முடியும் என்று நம்புகிறோம்.

தேசம் சஞ்சிகையை தபாலில் பெறுபவர்கள் இதுவரை உங்கள் சந்தாவைச் செலுத்தாது இருப்பின் தயவு செய்து 10 பவுண்களை அனுப்பி சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்

ஒத்துழைப்பிற்கு நன்றி.

www.tamilarangam.net

# இலங்கை White List இல் இருந்து நீக்கம்
# உள்துறை அமைச்சை பணிய வைத்த வழக்கு

இலங்கையில் மோசமடைந்து வரும் நிலையை கருத்தில் கொண்டு இலங்கையை பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் White List இல் இருந்து நீக்குவதற்கு அமைச்சர்கள் தீர்மானித்து உள்ளதாக உள்துறை அமைச்சின் Asylum & Appeals Policy Directorate, Andrew Saunders கடிதம் மூலம் தெரிவித்திருந்தார். இதற்கான உத்தரவு டிசம்பர் 12ல் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு மறுநாள் டிசம்பர் 13ல் அமுலுக்கு வந்தது.

இலங்கையின் நிலமைகள் நீண்டகாலமாகவே மோசமான நிலையிலேயே இருந்து வருகிறது. உள்துறை அமைச்சு இதனை இப்போது தான் கண்டு பிடித்ததாக 'காதில் பூ வைக்கிறது' என்பது சட்டத்துறையில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தெரிந்த விடயம். இவ்விடயம் தொடர்பாக டிசம்பர் 12 - 13 திகதிகளில் உள்துறை அமைச்சுக்கு சவால்விடுத்து உள்துறை அமைச்சை உயர் நீதி மன்றத்தில் சந்திக்கத் தயாரானார் சட்ட வல்லுநர் ராஜேஸ்குமார்.

இந்த வழக்கில் தோல்வி அடைவது நிச்சயம் என்ற நிலையில் கடைசி நேரத்தில் வழக்கிற்கு வரவேண்டிய அதே டிசம்பர் 12 - 13 திகதியில் இலங்கையை பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் இருந்து உள்துறை அமைச்சு நீக்கி உள்ளது. இந்த வழக்கை வாதடி உள்துறை அமைச்சு தோற்றுப் போயிருந்தால் உள்துறை அமைச்சின் முகத்திரை கிழிக்கப்பட்டிருப்பது மட்டுமல்ல அங்கு சமர்ப்பிக்கப்பட இருந்த ஆதாரங்கள் நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தஞ்சம் கோரிய பல நூறு தமிழர்களின் வழக்குகளுக்கு ஆதாரமாக அமைந்திருக்கும். இதனைத் தவிர்க்கவே உள்துறை அமைச்சு தனது இறுக்கமான நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டது. அல்லாமல் இலங்கையின் மோசமடைந்து வரும் நிலையை கருத்தில் கொண்டது என்பது 'விழுந்தும் மீசையில் மண் ஒட்ட வில்லை' என்ற கதைதான். உள்துறை அமைச்சர் ஜோன் ரீட்க்கு மீசை இல்லை என்பதும் நீங்கள் அறிந்ததே.

இலங்கையை White Listஇல் சேர்த்ததும் அதனை தொடர்ந்தும் White List இல் இருந்து நீக்காமல் வைத்திருப்பதும் நியாயமற்றது என்று உள்துறை அமைச்சுச் செயலாளருக்கு எதிராக தமிழ் இளைஞர் 'கெ' (பாதுகாப்பு காரணங்களுக்காக பெயர் வெளியிடப்படவில்லை உள்ளது.) தொடுத்த வழக்கிலேயே உள்துறை அமைச்சை ராஜேஸ்குமார் பணிய வைத்துள்ளார். Nationality, Immigration and Assylum Act 2002, Section 94 படி உள்துறை அமைச்சுச் செயலாளருக்கு பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் இருந்து ஒரு நாட்டை நீக்கி விடுவதற்கும் அதிகாரம் இருந்தது. இலங்கையில் நிலைமைகள் மோசமடைந்த நிலையிலும் உள்துறை அமைச்சுச் செயலர் அந்த அதிகாரத்தினை பயன்படுத்தத் தவறி இருந்ததே அவருக்கு எதிராக இந்த சவாலை மேற்கொள்வதற்க காரணமாக இருந்தது.

இவ்வழக்கிற்காக 1000க்கும் மேற்பட்ட பக்கங்க ளைக் கொண்ட ஆவணம் தயாரிக்கப்பட்டு 50 பக்கங்களிற்குள் அது சாரம்சப்படுத்தப்பட்டு முழுப் பலத்துடன் ராஜேஸ்குமார் உள்துறை அமைச்சை எதிர்கொள்ளத் தயாராகி இருந்தார். சைமன் கொக்ஸ் (Simon Cox - Doughty Street Chambers), இயன் லூயிஸ் ஆகிய இரு சிறந்த சட்டவாதிகள் (Baristers) இவ்வழக்கிற்கு உறுதுணையாக இருந்துள்ளனர். சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் நிபுணத்துவ அறிக்கையும் இவ்வழக்கில் பயன்படுத்தப்பட்டு இருந்தது.

உள்துறை அமைச்சின் இந்த முடிவால் இலங்கையில் இருந்து தஞ்சம் கோருபவர்களின் விண்ணப்பத்தை பரிசிலிக்கும் குடிவரவு அலுவலர் தஞ்சம் கேட்பவர் ஒரு பாதுகாப்பான நாட்டில் இருந்து தஞ்சம் கோருகிறார் என்ற விம்பத்துடன் முடிவெடுக்க மாட்டார். மேலும் ஓர்கிங்ரன் துரித தஞ்ச பரிசீலனை என்ற கெடுபிடிகளும் பெரும்பாலும் குறையும் என்றே நம்பப்படுகிறது. ஆனால் White Listஇல் இருந்து இலங்கையை எடுத்தது இங்கு தஞ்சம் கேட்பதற்கான Blank Cheque அல்ல.

இது ஒரு விரிவான பொது மக்களின் கண்ணோட் டத்துடன் சட்ட நுணுக்கத்துடன் சம்பந்தப்பட்ட ஒரு வழக்கே. இந்த வெற்றி தனிப்பட்ட தஞ்ச விண்ணப்ப வழக்குகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உதவும். இந்த முடிவால் தஞ்சம் வழங்கப்படும் என்று சில ஊடகங்களால் செய்யப்படும் பிரச்சாரம் மிகவும் அதீதப்படுத்தப்பட்டு உள்ளது. மேலும் இவ்வாறான பொய்ப் பிரச்சாரத் தூண்டுதல்கள் இலங்கையிலும் சில தேசியப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டு இருப்பது சில வெளிநாட்டுக்கு ஆட்களைத் தருவிக்கும் முகவர்களுக்கே நன்மை பயக்கும். இவற்றை நம்பி அப்பாவிகள் ஏமாற்றப்படும் சூழ்நிலை தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் ஏற்பட்டு உள்ளது.

இலங்கையில் பெப்ரவரி 2002ல் யுத்த நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் ஒஸ்லோவில் கைச்சாத்திட்டதை அடுத்து யூலை 22 2003ல் இலங்கையை பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் பிரித்தானிய உள்தறை அமைச்சு சேர்த்துக் கொண்டது.

இந்த வழக்கில் 3 அம்சங்களின் அடிப்படையில் ராஜேஸ்குமார் தனது நியாங்களை முன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வைத்துள்ளார்.

1. 'கெ'யின் தஞ்ச விண்ணப்பத்தை அடிப்படையற்றது (clearly unfounded) என்று நிராகரித்தது சட்டத்தக்கு மாறானது.

2. இலங்கையை பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் 22 யூலை 2003ல் இணைத்தது நியாயமற்றது.

3. இலங்கை நிலைமைகள் மோசமானது என்று தெரிந்தும் தனது அதிகாரத்தை பாவித்து அதனை மறுபரிசீலனை செய்து இலங்கையை அப்பட்டியலில் இருந்து நீக்காதது நியாயமற்றது.

இந்த வழக்கின் மிக அடிப்படையான அம்சம் இலங்கையில் மனித உரிமைகள் பற்றியதே. இலங்கையில் ஒரு குறிப்பிட்ட சனத்தொகைக்கு பொதுவாக ஆபத்து உள்ளது என்பது இங்கு நிருபிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் இருந்து இலங்கையை நீக்குவதற்கான பிரதான வாதம் இரண்டு.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருந்தும் வடக்க கிழக்கில் விடுதலைப் புலிகள் மக்களை தங்கள் சர்வதிகார ஆட்சியில் வைத்திருக்கிறார்கள். அங்கு மக்களின் அரசியில் உரிமைகள் மறுக்கப்படுகிறது, அரசியல் படுகொலைகள் இடம்பெறுகிறது, சிறுவர்கள் பலவந்தமாக இராணுவத்தில் சேர்க்கப்படுகின்றனர், எனவே இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளில் இருப்பவர்கள் பொதுவாக மனித உரிமை மீறல்களுக்கும் பாதிப்புகளுக்கும் உள்ளாகிறார்கள்.

அடுத்து இலங்கை அரச படையினரின் சித்திரவதைகள் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் தொடர்கிறது. அதனால் இலங்கையில் உள்ளவர்கள் பொதுவாக மனித உரிமை மீறல்களுக்கும் பாதிப்பு களுக்கும் உள்ளாகிறார்கள்.

2004 டிசம்பரில் இலங்கையின் யுத்த சூழல் காரணமாக அரசியல் தஞ்சம் கோரிய 'கெ'யின் தஞ்ச விண்ணப்பம் ஓர்கிங்ரன் துரித அரசியல் தஞ்சப் பரிசீலனையில் (clearly unfounded) அடிப்படையற்றது என்று நிராகரிக்கப்பட்டது. இந்நிலையில் 'கெ' சட்ட வல்லுநர் ராஜேஸ்குமாரின் Seudamores Solicitors சட்ட நிறுவனத்தை அணுகினார். Clearly unfounded என்ற அடிப்படையில் நிராகரிக்கப்பட்டதால் 'கெ' க்கு மேன்முறையீட்டு உரிமை இருக்கவில்லை. நீதிமன்றத்துக்குச் செல்ல Judical Review (சட்ட மீளாய்வு) செய்வதே ஒரேவழியாக இருந்தது.

இந்நிலையில் இலங்கையை White List இல் சேர்த்ததும் அதனை தொடர்ந்தும் White List இல் இருந்து நீக்காமல் வைத்திருப்பதும் நியாயமற்றது என்ற அடிப்படையில் உள்துறை அமைச்சின் முடிவுக்கு சவால் விடுவதே பொருத்தமானது ராஜேஸ்குமார் முடிவெடுத்தார். முதலில் உள்துறை அமைச்சு மேன்முறையிட்டு உரிமை தருகிறோம் வழக்கை முழுவதுமாகக் கைவிடுமாறு கேட்டது. ஆனால் அதனை ஏற்றுக்கொள்ளாமல் உள்துறை அமைச்சுக்கு எதிரான வழக்கைத் ராஜேஸ்குமார் அழுத்தமாக முன்னெடுத்தார்.

அப்படி இருந்தும் உள்துறை அமைச்சு 'கெ'க்கு மேன்முறையீட்டு உரிமையை வழங்கி திருப்திப்படுத்த முயன்றது. ஆயினும் தங்கள் நிலைப்பாட்டில் ராஜேஸ்குமாரும் 'கெ'யும் உறுதியாக நின்று போராடினர்.

மாரச் 29, 2005ல் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கை உள்துறை அமைச்சு பல்வேறு காரணங்களைக் காட்டி பின்னடிக்க முற்பட்டுள்ளது.

பின் இந்த வழக்கு 13, 14 யூலை 2006ல் உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்படுவதற்கு சில நாட்களின் முன் இலங்கையை பாதுபாப்புப் பட்டியலில் இருந்து நீக்குவது பற்றி மீளாய்வு செய்வதற்காக உள்துறை அமைச்சு ஒரு மாதத் தவணையை ராஜேஸ்குமாரிடம் கேட்டது. அதற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட போதும் ஒரு மாதம் வரை எந்தவித முடிவையும் உள்துறை அமைச்சு தெரியப்படுத்தத் தவறியது. இதனை நீதிமன்றத்திற்குத் தெரியப்படுத்தி மேன்முறையீட்டுக்கான திகதியை நிர்ணயிக்கும்படி ராஜேஸ்குமார் உயர் நீதிமன்றத்தைக் கேட்டுக் கொண்டார்.

இறுதியில் டிசம்பர் 12 - 13 2006ல் உயர் நீதிமன்றுக்கு இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட திகதி குறிக்கப்பட்டது. இந்நிலையில் டிசம்பர் 8ல் தாங்கள் இலங்கையை பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் இருந்து நீக்குவதாக உள்துறை அமைச்சின் Asylum & Appeals Policy Directorate, Andrew Saunders அறிவித்தார்.

உள்துறை அமைச்சின் இந்த முடிவு 'கெ'யின் உள்துறை அமைச்சுச் செயலாளரிற்கு எதிரான இவ்வழக்கிற்கு முற்றுப்புள்ளி வைத்தது.

ஆனால் இதனை சில பொது அமைப்புகளும், நபர்களும் தமது வெற்றியாக காட்டிக்கொள்கின்றன. தங்களைத் தொடர்பு கொள்ளுமாறு தொலைபேசி இலக்கங்களையும் வழங்குகின்றன. 'காகம் இருக்க பனம் பழம் விழுந்து' என்று பனங்கொட்டையானுக்கு பனம்கொட்டையானே கதை சொல்வது வேடிக்கையாகவே உள்ளது. எது எப்படியானாலும் அப்பாவித்தனமாக உங்கள் பணத்தை கொடுத்து ஏமாந்து விடாமல் உஷாராக இருங்கள்.

(அட்டையின் கீழ் இடது பக்கம் சட்டவல்லுனர் ராஜேஸ்குமார்)

www.tamilarangam.net



# ஒரு படுகொலை ஒரு பாடசாலை

நட்சத்திரன் செவ்விந்தியன்

ஒக்ரோபர் மாதம் ஏழாம் திகதி அதிகாலை ஏழு மணியளவில் தெல்லிப்பளை மஹாஜனாக் கல்லூரியின் முன்னாள் அதிபரான 68 வயதான கதிர்காமத்தம்பி நாகராஜா வி.புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். அவர் அதிபராக இருந்த காலப் பகுதியான 1985 இலிருந்து 1998 வரையான காலம் வட கிழக்கிழக்கிலுள்ள பெருமளவிலான பாடசாலைகள் நடைபெற்று வந்த யுத்தம் காரணமாக மிகுந்த நெருக்கடிகளை எதிர்கொண்ட காலம்.மஹாஜனாக்கல்லூரியும்பலநெருக்கடிகளை எதிர்கொண்டதோடு சிலகாலத்துக்கு தெல்லிப் பளையிலிருந்து இடம்பெயர்ந்து வேறு இடத்தில் இயங்கவேண்டிய பெரும் இடருக்கும் உள்ளாகியது. இவற்றையெல்லாம் சமாளித்து ஏறத்தாழ 12 ஆண்டுகளாக சோர்வின்றி அப்பாடசாலையை இயக்கியவர் நாகராஜா.

ஆனால் அவர் தன் மரணத்தின்போது பெற்றதோ தமிழ் பாசிஸத்தினது தேசத்துரோகி என்ற அவமந்திர உச்சாடனம். ஏறத்தாழ புலம்பெயர் நாடுகளிலுள்ள அனைத்து மஹாஜனாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்களும் அவரது மரணத்தை வேண்டுமென்றே கண்டிக்கத் தவறியதோடு அவருக்கான அஞ்சலிக் கூட்டங்களையும் நடத்தாது விட்டன. குறிப்பறிந்து இயங்குவதில் புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களிடம் கிட்லர் கால ஜெர்மானியர்கள் பிச்சை வாங்கவேண்டும்.

இலங்கை அரசாங்கங்களும் இந்திய இராணுவமும் பல தமிழ் விடுதலை இயக்கங்களும் படுகொலைகளைச் செய்துள்ளன. ஆனால் வழமையைப் போலவே படுகொலைகளைப் பொறுத்த வரையில் விடுதலைப் புலிகளுக்கு நிகர் எவருமில்லை. விடுதலைப் புலிகள் மட்டுமே தமிழ்ப் பாடசாலை அதிபர்களைக் கொன்றவர்கள் என்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவால் கொல்லப்பட்டவர் என்று பரவலாக நம்பப்பட்ட கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் சிவகடாட்சத்தையும் உண்மையில் கொன்றது புலிகளே என்று கடைசியாக வந்த மனித உரிமைகளுக்கான யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க அறிக்கை குறிப்பிடுகிறது.

அதிபர் நாகராஜாவைப் பற்றிப் பேசுவதற்கு முதல் மகாஜனாவைப் பற்றிப் பேசவேண்டும். பெரிய பிரித்தானியாவின் எற்றன் (Eton College: இங்கு தான் பிரித்தானிய அரச குடும்ப வாரிசுகள் கல்வி பயின்றன.) கல்லூரிக்கும் இந்தியாவின் டூன(Doon) கல்லூரிக்கும் சற்று சமனான ஒரு உயர்தரத் தமிழ் பாடசாலையை இலங்கையில் கண்டுபிடிக்க முடியுமாயின் சந்தேகமின்றி அது தெல்லிப்பளை மஹாஜனாக் கல்லூரியாகத்தான் இருக்கும். எற்றன் கல்லூரியும் டூன் கல்லூரியும் ஆண்கள் பாடசாலை என்பதோடு அங்கு பயிலும் அனைத்து மாணவர்களும் வீட்டுக்குச் செல்லாது விடுதியிலேயே தங்கிப் படிக்கும் மாணவர்கள் (Boarding school).

மகாஜனாக் கலூரியிலோ 10 வீதத்துக்கும் குறைவானவர்களே தங்கிப்படிக்கும் மாணவர்களாக இருந்தார்கள் என்பதுபோக இன்னொரு

www.tamilarangam.net

முக்கியமான வித்தியாசம் மஹாஜனா ஒரு கலவன் பாடசாலை. தமிழில் 'கலவன் பாடசாலை' என்பதே ஒரு 'இரண்டாந் தரமான புலமையற்ற மாணவர்கள் பயிலும்' பாடசாலைக்கான ஒத்தசொல் என்ற தவறான கருத்து ஊன்றியிருக்கும் சூழலில் மஹாஜனா ஒரு அதிசயம்.

ஆங்கிலேயக் காலனியாதிக்க காலத்தில் கிறிஸ்தவப் பாதிரியார்களாலேயே பெருமளவு பாடசாலைகள் தொடங்கப்பட்டதால் இறுக்கமான கிறிஸ்தவ சமய மரபுகளுக்கேற்ப பால் பிரிக்கப்பட்ட பாடசாலைகளே பெருமளவில் இலங்கையில் உருவாகின. பின்னர் இதே மரபைப் பற்றியே யாழ் இந்து போன்ற பல இந்துக் கல்லூரிகளும் தொடங்கப்பட்டாலும் மஹாஜனா விதிவிலக்காகவே இருந்தது. பால் பிரிக்கப்பட்ட உயர்தரப் பாடசாலைகளே மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு உகந்ததாக இருக்கும் என்ற கிறிஸ்தவ மரபை ஒட்டிவந்த தவறான கல்விக்கொள்கையையும் மஹாஜனா பொய்யாக்கி இருக்கிறது.

மூன்றாம் உலக நாடுகளில் கணித மற்றும் விஞ்ஞானத்துறைகள் தவிர்ந்த சமூக மானுடவியல் துறைகள் பிரயோசனமற்ற கற்கை நெறிகள் என்றும் அவற்றைப் பயில்வதால் அதிக வருமானம் பெறும் தொழில்வாய்ப்பைப் பெறமுடியாது என்ற கருத்துகளும் ஊன்றிப் போயிருக்கிறது. இதை அடியொற்றியே எழுபதுகளின் பிற்பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்தின் பிரபல்யமான ஹாட்லிக் கல்லூரி, இந்துக்கல்லூரி போன்ற பாடசாலைகளில் உயர்தர (A/L) வகுப்பில் கலைப் பீடங்கள் இழுத்து மூடப்பட்டன. இதனை அப்பாடசாலைகள் தங்களது புகழினதும் சிறப்பினதும் வெளிப்பா டாகக் கருதிக்கொள்வதுதான் இன்னும் விசமத்துக் குரியது. மஹாஜனா இத்தவறைச் செய்யவில்லை.

யாழ் இந்துக் கல்லூரியில் பயின்று கணிதத்தில் நான்கு அதி திறமைச்சித்திகளைப் பெற்று இருந்த என்னுடைய ஒரு நண்பரோடு தொலைக்காட்சியில் ஒரு தமிழ்ப்படம் பார்த்துக்கொண்டிருந்தேன். அந்தப்படத்தில் ஆதாம் ஏவாளைப்பற்றிய ஒரு காட்சி ஒரு பாடல் காட்சியில் வந்தது. அதைப் பார்த்த என்னுடைய நண்பரோ யார் ஆதாம், ஏவாள் என்று என்னிடம் வினவினார். ஆதாம், ஏவாளை எல்லோரும் அறிந்திருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லைத்தான். ஆனால் இதற்கூடாக வெளிப்படுவது என்னவென்றால் என்னுடைய இந்துக் கல்லூரி நண்பர் தன்னுடைய பாடப் புத்தகங்கள், அவை சம்பந்தப்பட்ட புத்தகங்கள் தவிர்ந்த வேறு எந்த புத்தகத்தையோ பத்திரிகையோ தன் வாழ்நாளில் பிரித்துப் பார்த்ததில்லை என்பதைத்தான்.

தலைசிறந்த ஆங்கிலப் படைப்பாளியும் மனச்சாட்சியின் கைதியுமான ஜோர்ஜ் ஓர்வெல், எற்றன் கல்லூரியில்தான் பயின்றார். அவர் இலகுவாக அதனைத் தொடர்ந்து கேம்பிரிட்ச்சிலோ ஒக்ஸ்போட்டிலோ அனுமதி பெற்று பல்கலைகழகக் கல்வியும் பெற்று இருக்கலாம். எனினும் அவர் அவ்விதமின்றி பர்மாவுக்கு பொலிஸ் அதிகாரியாக பணியாற்றச் சென்றார். எற்றனில் பயின்றவர்களுக்கு பல்கலைக்கழகமே தேவை இல்லாதவாறு எவ்வாறு எற்றனே ஒரு பல்கலைக் கழகமோ அவ்வாறுதான் மஹாஜனாவும் ஒரு பல்கலைக்கழகம்தான். அற்புதங்களை நிகழ்த்தவல்லவர்கள் மஹாஜனா மாணவர்கள்.

எண்பதுகளில் யாழ்ப்பாணத்தில் இருந்து உருவாகி வந்த தலைசிறந்த அகழ்வாராய்ச்சியாள ரும் வரலாற்றறிஞருமான பொ. ரகுபதியின் கதை எல்லோரையும் ஆட்கொள்ளக்கூடியது. ரகுபதி யாழ்ப்பாணம் இந்துக் கலூரியில்தான் தனது க.பொ.த சாதாரண தரம் வரை பயின்றார். உயர்தரத்தில் அவர் கலைப் பாடங்களையே பயில விரும்பியபோதும் அக்கல்லூரியில் கலைப்பிரிவு இல்லாத படியினால் ஆரம்பத்தில் சிறிதுகாலம் விஞ்ஞானப் பாடங்களையே பயின்றார். பின்னர் தான் கலைப் பாடங்களையே பயிலப்போவதாக பாடசலை நிர்வாகத்திடம் சொன்ன போது அவரைப் போன்ற கிறுக்கர்களுக்கு மஹாஜனாவே சரி என்று ஏளனம் செய்யப்பட்டார். ரகுபதி மஹாஜனாவுக்குச் சென்று கலைப்பிரிவில் பயின்று பின்னர் மாதோட்டத்திலும் குடாநாட்டின் பகுதிகளிலும் அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டபோது அத்துறை சார்ந்த அறிஞர்களின் புருவங்கள் உயர்ந்தன. இவரைப் போன்ற எத்தனையோ சமூக மானுடவியல் துறை அறிஞர்களாக மிளிர வேண்டியவர்களை ஹாட்லிக் கல்லூரி போன்ற பாடசாலைகள் காயடித்துவர மஹாஜனா மட்டுமே ஒரே தஞ்சம்.

மஹாஜனாக் கல்லூரியில் பயின்ற வீ.வசந்தன் என்பவர் தமிழ்நாட்டில் ஒரு எந்திரவியற் கல்லூரியில் எந்திரவியல் படித்துக்

www.tamilarangam.net



## நாவலரின் புலப்பெயர்வு

ஆறுமுகநாவலரின் சிலையை லண்டன் சைவமுன்னேற்றச் சங்கம் இறக்குமதி செய்து அதனை ஆலயத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் சென்று பூசை செய்யவும் முற்பட்டுள்ளது. ஆறுமுகநாவலரை சைவத்தை வளர்த்த மகான் என்று யாழ் சைவ வேளாள உயர்குடிகள் போற்றிப் பாராட்டும் அளவுக்கு நாவலர்(ன்) எதையும் சாதித்துவிடவில்லை. ஆனால் இந்து சமயத்தில் புற்று நோயாய் போன்று எங்கும் வியாபித்து நிற்கும் சாதிய ஒடுக்குமுறைகளுக்கு மெருகூற்றி அம்மக்களை மேலும் ஒடுக்கிய பெருமை நாவலர்(ன்)க்கு உண்டு. அன்று ஆங்கிலேயர்களினால் ஏற்பட்டு வந்த சமூக மாற்றங்கள் இந்த முறைமையை அழித்துவிடும் என்று பயந்த யாழ் சைவ வேளாளர்கள் நாவலர்(ன்) தலைமையில் அணி திரண்டனர். இன்று ஆங்கிலேயரின் நாட்டிற்கே புலம்பெயர்ந்தாலும் யாழ் சைவ வேளாளர் கூட்டம் சைவத்துக்குப் பின்னால் நாவலனை இருத்தி அதற்குப் பின்னால் தமது மிச்ச சொச்ச சாதிய நலன்களை பாதுகாக்க முற்பட்டுள்ளன. இது பற்றிய விரிவாக கட்டுரை அடுத்த இதழில்.

கொண்டிருந்தார். அவரோடு தமிழ் நாட்டைச் சேர்ந்த இலக்கியத்தில் ஈடுபாடுள்ள ஒரு தமிழ் நாட்டவரும் பயின்றார். ஆர். கே. நாராயணன், சல்மான் றஸ்டி போன்றோரின் நாவல்களைப் படிக்கும் அவர் ஒரு நாள் வசந்தனிடம் தமிழில் மேற்கூறியவர்கள் எழுதுகின்றவற்றைப் போன்ற நாவல்கள் இல்லை என்றும் இருப்பவை எல்லாம் பாலகுமாரன் சுஜாதா போன்றவர்கள் எழுதும் வியாபார நாவல்கள் என்றும் குறைபட்டுக் கொண்டாராம்.

அடுத்த நாள் வசந்தன் தன் சகமாணவரிடம் தன்னிடம் அப்போதிருந்த சுந்தர ராமசாமியின் ஜே.ஜே சில குறிப்புக்கள் நாவலைப் படித்துப் பார்க்குமாறு கொடுத்தார். அதை ஒரே அமர்வில் இருந்து ஆச்சரியத்தோடு படித்து முடித்த பின்னவருக்கு அதன் பிறகே நவீன தமிழிலக்கியத்தின் பரிச்சயமே வந்தது. (ஜே.ஜே சில குறிப்புக்கள் சுந்தர ராமசாமியின் Masterpiece என்பதிலோ அல்லது அது தமிழில் வந்த சிறந்த நாவல்களில் ஒன்று என்பதிலோ எனக்கு உடன்பாடு இல்லை என்பது வேறு விடயம்)

மஹாஜனாக் கல்லூரியில் உயர்தரவகுப்பில் பயின்றுகொண்டிருக்கும் போதே பாலசூரியன் போன்றவர்களால் வெளியிடப்பட்ட 'புதிசு' என்ற இலக்கியச் சஞ்சிகை பாடசாலை மாணவர்களால் வெளியிடப்படுகிற சஞ்சிகையின் தரத்தில் இருக் காது ஒரு தொழில்சார் இலக்கியப் பதிப்பாளரால் வெளியிடப்படுகிற அளவு தரத்தில் இருந்தது.

வாசிப்பு முழுமையான மனிதனை உருவாக்கு கிறது என்ற தத்துவத்தை முழுமையாகப் பிரயோகித்து அதன் முழுப்பிரயோசனங்களையும் பெற்று அனுபவிப்பவர்கள் மஹாஜனா மாணவர்கள்.

ஈழத்தேசிய விடுதலை இயக்கங்கள் உருவாகிய போது, இந்திய அரசிடமிருந்து பயிற்சி உதவிகள் பெறுவதும்கூடத் தவறு என்று கருதிச்செயற்பட்டு உன்னத கொள்கைகளிலிருந்து இம்மியளவும் பிசகாது களங்கமற்ற இயக்கம் என்று பெயரெடுத்த தமிழீழத் தேசிய விடுதலை முன்னணி (NLFT)யில் மஹாஜனாவின் மாணவர்களில் பலர் போய்ச் சேர்ந்ததும் கூட ஒரு தற்செயலான நிகழ்வு அல்ல.

மஹாஜனா பாடசாலையின் ஸ்தாபகரான துரையப்பாபிள்ளை ஒரு கவிஞராக இருந்ததும் மஹாஜனாக் கல்லூரியில் மிகச்சிறப்பான நூலகம் இருந்ததும் மஹாஜனாவிற்கு தொடர்ச்சியான வலுவான ஒரு இலக்கியப் பாரம்பரியம் இருப்பதற்கு காரணமாக இருக்கலாம். ஆனால் அதே சமயம் இப்பாடசாலை கணித விஞ்ஞானத்துறைகளிலும் விளையாட்டுத்துறைகளிலும் யாழ் இந்துக்கல்லூரி முதலியவற்றுக்கு எந்த விதத்திலும் குறையாமல் சாதித்துக்கொண்டிருக்கிறது. இதில்தான் அதன் முழுமையும் தலைசிறப்பும் வருகிறது.

இத்தகைய சிறந்த பாரம்பரியம் மிக்க மஹாஜனாவின் அதிபர் நாகராஜாவின் கொலையும் பத்தோடு பதினொன்றாக புலிகளால் கொல்லப்பட்ட இருபத்தையாயிரம் தமிழர்களில் ஒருவராக விரைவில் மறக்கப்பட்டுவிடும். மஹாஜனாவின் பழைய மாணவரான, விரிவுரை யாளராக இருந்துகொண்டே பேராசிரியர் என்று கதைவிடும் சேரன் போன்றவர்களே புலிகளுக்காக வெட்கமின்றி வக்காலத்து வாங்குகிறார்கள். 'தளராத படைத்திறன், போர்வலு என்பவற்றின் மீது உறுதியாகக் கட்டப்பட்ட நம்பிக்கையோடும் பெருமிதத்தோடும்' தேசியத்தலைவர் இக்கொலை க்கு உத்தரவிட்டிருக்கலாம் என்று சேரன் எழுதக் கூடும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தோழர் இரத்தினசபாதிக்கு ஈரோஸ் வழங்கும் இறுதி வணக்கம்

சாதாரணரின் வாழ்விற்கு அசாதாரண விசையும் வீச்சும் கொடுப்பதுடன், விளக்கமும் கொடுப்பவனை எப்படிச் சித்தரிப்பது? என்ற கேள்வி, தோழர் இரத்தினாவுடன் நெருக்கமாகக் கூடிப் பழகி, அவர் திறமைகளையும் அதேவேளை அந்த அண்மிப்பினால் தெரியவரும் குறைபாடுகளையும் கண்டவர்களுக்கு மிகவும் கடினமானது. "முன்னுக்கு ஓடுபவனுக்கும் முன்னோடிக்கும்" உள்ள பாரிய வேற்றுமைகளை முற்றே உணர்ந்தவர் தோழர் இரத்தினா. அவர் எங்கே எப்போ பிறந்தார், என்ன படித்தார் என்பவை கேள்விகள் இல்லை எமக்கு. யாழ்குடா நாட்டுள் பிறந்தும், "மதத்தால் இந்துவானாலும், மாண்பில் முஸ்லீம் ஆனாலும், வேதம் பயிலும் கிறீஸ்தவனும், தீரச் சைவன் ஆனாலும் யாவரும் ஈழவர்" என்றாரே, அது போதும், அதற்கு மேல் எதற்கு.

ஏன்? அன்றுதொட்டே அவரை அண்டிப் பழகிய நாம் யாவரும் எம்மனதுகளில் முதலாவது விடுதலையைக் கண்டுவிட்டோம். அதாவது, எம்மை முடக்கி வைத்திருப்பது எமது அறியாமையும், விசாலமில்லா சிந்தனைகளுமே என்று நன்கு புரிந்து உணரத் தொடங்கிவிட்டோம். "தத்துவாரத்த கற்பனைதான் உண்மையான உருவாக்குமையின் பிதா" என்று கூறி தன் கற்பனையையே நிஜமாக்கிய ஐயின்ஸ்ரையினைப்போலவே தோழர் இரத்தினாவும் தன்னை யதார்த்த வாதங்களால் சிறைப்பட அநுமதிக்கவில்லை. ஆனால், கற்பனைகளுக்கும் ஸ்திரமான வடிவங்களும், காத்திரமான நியாயங்களும், அத்திவாரங்களும் வேண்டும் என்பதையும் தீர்க்கமாக உணர்தவர் ஸ்தாபகர் தோழர் இரத்தினா.

இளைய பருவத்தில் தமிழரசுக் கட்சியுடன் இணைவு கொண்டிருந்தபோதிலும், தனது சிறுவயது மலைநாட்டு வாழ்க்கைக் காலத்தின் அநுபவத்தினாலும், 'தந்தை' செல்வாவின் வழி நடத்தலாலும் மலைநாட்டுத் தமிழர்களது துன்பத்தையும், அவர்படும் இம்சையையும் நன்கு உணர்ந்திருந்த இரத்தினா, இஸ்லாமியத் தமிழர்கள்தான் சிங்களசோவனிசத்தின் முதற் பலிக் கடாக்கள் என்பதை ஏற்றுக்கொள்ளத் தயங்கவில்லை. "சிங்களச் சோவனிசம் தனது எதிரிகளை எவ்வாறு இனம் காண்கிறது?" என்ற தத்துவார்த்தமான கேள்வியை கேட்ட இரத்தினா, "இவர்கள் யாவருமே ஒரு சாரார் என சிங்கள சோவனிசத்தால் அடையாளம் காட்டப்பட்டவர்கள். இவர்கள் யாவரும் தமிழ் பேசுபவர்களாக இருப்பதும் வெறும் சந்தர்ப்பமல்ல!" என்ற பதிலுக்கு வருவதில் தடக்கம் கொள்ளவில்லை.

"இவர்கள் யாவரும் ஒரு தேசத்தவரா?" என்பதே அவரது இரண்டாவது கேள்வி. மதத்தாலும், பிராந்திய ரீதியிலும், சாதி வர்க்க படிவங்களிலும் வித்தியாசங்களைக் கொண்டவர்கள், மத்திய அரசுடன் இணைந்த பொருளாதாரத்தில் தங்கியவர்கள், வெறும் உணர்வினால் மட்டுமே அல்லது நாம் ஒரு தேசம் என்று சொல்லிவிடுவதால் மட்டுமே, ஒரு தேசத்தவராகி விடுவதில்லை என்பதை நன்கே புரிந்தவர் தோழர் இரத்தினா. இனிமேல்தான் ஒரு தேசத்தை கட்டப் போகிறோம் என்பதை உணர்ந்து கொண்டபோது, ஒரே பூ ர்வீகப் பிரதேசத்தில் வாழும் இஸ்லாமிய, சைவ, கிறீஸ்தவர்கள் ஒரு தேசமாக இணைந்திட தம்முள்ளே போராடுவதில் என்ன பிழை என்ற கேள்வி அவரிடம் அடுத்து எழுந்தது. அப்படியானால், தமிழ் பேசுவோர் என்ற ஒரே காரணத்தால் மற்றோரைப்போலவே ஒடுக்கப்படும் மலைநாட்டவரை ஏன் இப்போக்கில், தொடர்பான பிரதேசத்தில் வாழாதவர் என்ற ஒரே காரணத்தைக் கொண்டு அப்புறப்படுத்திட வேண்டும்? என்பது அவரது தொடர்ந்த கேள்வி. அவர்களும் இப் புதிய உலகின் பங்குதாரர்கள் ஆவதானால், அதற்கான தத்துவாரத்த சிந்தனாவாதம் எது என்பதே முற்றான கேள்வி.

'இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் உள்ளடக்கிய புதிய தேசம் ஒன்றினை, உள்ளே சமத்துவ சமதர்மத்துக்கும், ஒற்றுமைக்கும் போராடுவதாலும், வெளியே சிங்கள சோவனிசத்தின் இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிராக போராடுவதாலும் கட்டி எழுப்பலாம்' என்பதே தோழர் இரத்தினாவின் இறுதியான உறுதி தரும் முடிவு. இதனை நிச்சயமாக்கிட ஈரோஸ் என்ற அமைப்பை உருவாக்கினார் தோழர் இரத்தினா. கிரேக்க சிந்தனாவாத்தில், ஈரோஸ் என்ற பதத்திற்கு 'ஒன்றிணைக்கும் சக்தி' என்றொரு விளக்கம் இருப்பதையும் அவர் அறிந்து வைத்திருந்தார். அதேவேளை, EROS என்பது ஈழப் புரட்சி அமைப்பாளர்கள் (Eelam Revolutionary Organisers) எனப் பொருள்ளாக்கப்படும் என்றும் விளக்கம் தந்தார். தம்மைத் தாமே, தாம் நினைத்த உடனேயே புரட்சிவாதிகள் என சித்தரிப்பவர்களைக் கொண்ட 'தமிழர் – அரசியல்' பிராந்தியத்தில் EROS அமைப்பினையோ, அதன் கடைசி ஆங்கில எழுத்தான 'S' குறித்தான விளக்கத்தையோ நிரந்தரமாக நியாயப்படுத்த தோழர் இரத்தினாவால் இயலாது போய்விட்டது. இருந்தும், திம்புப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டு, மலைநாட்டுத் தமிழரது பிரதிநிதுத்துவமே இல்லாத நிலையில், அவர்களது குடியுரிமைப் பிரச்சனையை திம்புவின் நான்காவது பிரகடனமாக்கிய பெருமை குறிப்பாக தோழர் இரத்தினாவையும் ஈரோஸ் அமைப்பையும், கூடவே அதனை அநுசரித்து அனுமதித்த மற்றைய 'தமிழர்' அமைப்புகளையுமே சாரும். இச் சாதனையுடன், "உன் வாழக்கையில் பெருமைப்பட என்னதான் செய்தாய்?" என்ற கேள்வியை அசட்டையாகவே அலட்சியம் செய்திடக் கூடிய மனத் திறனையும் தோழர் இரத்தினா அன்றே பெற்றார்.

ஒரு மனிதன் தனது குறுகிய வாழ்க்கைக் காலத்தில், அவர்களது தலைவர்கள் என்போரே பெற்றுத்தர முடியாத, ஒரு மனிதக் கூட்டினது பூ ர்விக உடமையை வென்று தந்தேன் என்ற மகிழ்வான உணர்வுடனும், மற்றைய திம்பு பிரகடனங்கள் நிறைவு காணவில்லையே என்ற கவலையுடனுமே தோழர் இரத்தினாவினது ஆவி பிரிந்திருக்கும் என்பதில் எமக்கு ஐயமே இல்லை.

நாம் ஈழவர்! நமது மொழி தமிழ்! நம் நாடு ஈழம்!

ஈரோஸ் (Eelam Revolutionary Organisers; EROS)

14, மார்கழி 2006



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நினைவுகள்: கவிஞர் சு.வில்வரத்தினம்

என்.செல்வராஜா, நூலகவியலாளர்

ஈழத்துக் கவிஞர்களில் குறிப்பிடத்தக்க ஒருவராகச் சமகாலத்தில் மதிக்கப்பட்ட சு.வில்வரத்தினம் புங்குடுதீவில் பிறந்து வளர்ந்து, திருக்கோணமலை, உவர்மலையில் வாழ்ந்து வந்தவர். அண்மையில் கொழும்பு டெல்மன் மருத்துவசாலையில் ஈரல் அலர்ச்சி நோய் (cirrhosis) காரணமாக அனுமதிக்கப்பட்டு கடந்த 09.12.2006 அன்று அமரரானார்.

எழுபதுகளின் முற்பகுதியில் எழுதத் தொடங்கிய இவர், சிறந்த பேச்சாளருமாவார். கவிஞர் சு.வில்வரத்தினம், இளமைக்காலத்தில் தான் பிறந்த புங்குடுதீவுப்பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக எழுத்தாளர் மு.தளையசிங்கத்துடன் இணைந்து பணியாற்றியுமுள்ளார். மு.தளைய சிங்கத்தின் சத்தியாக்கிரகங்களிலும் முக்கிய பங்கேற்றுள்ளார். பிற்காலத்தில் ஈழத்தமிழரின் போர்க்கால வாழ்வியலை தடைகளைத் தகர்த்து, உலகறியச் செய்தவர்.

'இந்த மண்ணும் எங்கள் நாட்களும்' என்ற தலைப்பில் 1982இல் வெளிவந்த கவிதைத் தொகுதியில் இவரது கவிதைகள் பல இடம்பெற்றிருந்தன. வில்வரத்தினத்தின் எழுத்துக்களைத் தாங்கிய முதல் நூல் இதுவென்றே கருதுகின்றேன்.

'அகங்களும் முகங்களும்' என்ற இவரது கவிதைத் தொகுதி, 1985இல் வெளிவந்தது. 'காலத்துயர்' இவர் எழுதிய இரண்டாவது கவிதைத் தொகுப்பாகும். 1995இல் வெளியிட்ட இந்நூலில், அக்டோபர் 1992 இல் யாழ்ப்பாணத் தீவுகள் சிறைப்பிடிக்கப்பட்டது முதல் தன் குடும்பத்துடன் இணையத்துடித்த எட்டு மாத காலத்துயரினைக் கவிதைகளாக்கி இருந்தார். தமிழ்பேசும் மக்களின் சமகாலத் துயர்களையும், வடபகுதி மக்களின் புலப்பெயர்வின் அவலங்களையும் தொடரும் இன்னல்களையும் கவித்துவத்தோடு பதிவு செய்திருந்த 'காலத்துயர்' ஈழத்துக் கவிதைத் துறையில் விதந்து பேசப்பட்டது.

'காற்றுவழிக் கிராமம்' 1995இல் வெளியிடப்பட்டது. யுத்த காலத்தில் சிதைக்கப்பட்ட ஈழத்தின் கிராமங்களின் பதிவை உள்வாங்கிய ஆவணமாக இக் கவிதைத்தொகுப்பு அமைந்திருந்தது.

'நெற்றிமண்' 2000 இல் வெளிவந்தது. எமது மண்ணின் யதார்த்தச் சித்திரிப்பு என்பதை விட மண்ணின் ஆத்மார்த்த குரலாய் ஒலிக்கின்ற கவிதைகளாக அத்தொகுப்பு இனம்காணப்பட்டது.

சு.வில்வரத்தினத்தின் மேற்படி நான்கு கவிதைத் தொகுப்புக்களும் இலங்கையிலிருந்து வெளிவந்த நிலையில், 'உயிர்த்தெழும் காலத்திற்காக' என்ற தலைப்பில், இந்நான்கு தொகுப்புகளிலும் இடம்பெற்ற கவிதைகளுடன், இதுவரை வெளிவராத 2000 வரையுள்ள பிற கவிதைகளையும் உள்ளடக்கியதாக முழுமையான தொகுப்பாக 2001இல் தமிழகத்திலிருந்து பாரிய நூலொன்றினையும் வெளியிட்டிருந்தார். கவிஞரின் 30 ஆண்டுக்காலக் கவிதைப் படைப்புகளின் ஒருமித்த தொகுப்பு என்ற வகையில் ஈழப் போராட்டத்தின் பரிணாம வளர்ச்சியை இக்கவிதைகள் துல்லியமாகப் படம்பிடித்துக்காட்டின.

'புதுத் துளிர் நூறு' என்ற தலைப்பில் 2004இல் ஒரு நூலை செ.யோகராசா, நந்தினி சேவியர், முல்லைக் கோணேஸ் ஆகியோருடன் இணைந்து, திருக்கோணமலை: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறைக்காக சு.வில்வரத்தினம் தொகுத்தளித்திருந்தார். முல்லைத்தீவு, திருக்கோணமலை மாவட்டப் பாடசாலைகளின் மாணவ மாணவியரான இளங் கவிஞர்கள் பலர் இத்தொகுப்பின் வாயிலாக இனங்காணப்பட்டுள்ளார்கள்.

வேற்றாகி நின்ற வெளி என்ற தலைப்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஈழத்துக் கவிதைகளைக் கொண்ட தொகுப்பொன்று கோவை விடியல் பதிப்பகத்தினால் 2001இல் வெளியிடப்பட்டது. 1990களில் வெளிவந்தவற்றில் தேர்ந்த 24 ஈழத்துக் கவிதைகளின் இத்தொகுப்பில், சு.வில்வரத்தினத்தின் கவிதைகளும் இடம்பெற்றிருந்தன.

அமரர் வில்வரத்தினத்தின் படைப்புக்கள் அவர் வாழும் காலத்திலேயே பலராலும் பேசப்பட்டவை. முறையாக ஆவணப்படுத்தப்பட்டும் உள்ளன. அவரது சமூக இலக்கியப் பணிகள் ஈழத்து தமிழ் இலக்கியக்களத்தில் குறிப்பாக, போர்க்கால கெடுபிடிகள் பற்றிய நேர்மையான பதிவுகளாக நின்று நிலைத்திருக்கவல்லன. எதிர்காலத்தில் இத்தகைய ஈழத்து இலக்கிய ஆய்வுகளை மேற்கொள்பவர்களுக்கு வில்வரத்தினத்தினத்தின் கவிதைகள் வழிகாட்டியாக அமையும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**ரதன்**

எழுத்து இயக்கம்: ஜோன், ஒளிப்பதிவு: சஞ்சை, இசை: சதீஸ், படத்தொகுப்பு: கோமகன், தயாரிப்பு: சி.பிரபாகரன், நடிப்பு: நந்தா, மதுமிதா, முல்லை யேசுதாசன்

டிசம்பர் 29, 1951ல் முதலாவது ஈழத் தமிழ் திரைப்படம் குசுமலதா திரையிடப்பட்டது. அன்றில் இருந்து இன்று வரை தோட்டக்காரி, கடமையின் எலலை, குத்து விளக்கு, புதிய காற்று, காத்திருப்பேன் உனக்காக, நான் உங்கள் தோழன், வாடைக் காற்று, தெய்வம் தந்த வீடு, இரத்தின் இரத்தமே, மாமியார் வீடு, கோமாளிகள், பாதை மாறிய பருவங்கள், மஞ்சள் குங்குமம், ஏமாளிகள், சர்மிளாவின் இதயராகம், பொன் மணி, மீனவப் பெண், நிர்மலா, புதிய காற்று போன்ற பல திரைப்படங்கள் வெளிவந்துள்ளன. (இலங்கை தமிழ்ச் சினமாவின் கதை.) சில படங்கள் சிங்கள மொழியில் இருந்து மொழி மாற்றம் செய்யப்பட்டன.

புலம் பெயர்வில் தற்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கும் பல கலைஞர்கள் இப்படங்களில் முக்கிய பாத்திரங்களில் நடித்துள்ளனர். (கே.ஸ். புாலச்சந்திரன், ரகுநாதன், சுப்புலக்சுமி, காசிநாதன் போன்றோர்)

(முதாலாவது சிங்களத் திரைப்படமான 'கடவுனு பொறுந்துவ' படத்தை தமிழாரான எஸ். எம் நாயகம் தயாரித்தார்.)

ஆணிவேர் விளம்பரத்தில் முதல் வெண் திரைப்படம் என விளம்பரம் செய்திருந்தார்கள். (வெண் என்பது ஆங்கிலத்தில் HD என்ற பொருள் படுமா? வன்னி தலைமை அகராதிக்குத் தான் தெரியும்)

மேலே குறிப்பிட்ட இப்படங்களில் பெரும் பாலானவை இலங்கை இனப்பிரச்சினைகரு முன்பானவை. இவை பெரும்பாலும் ஈழத் திரைப்பட தனித்துவத்தையும், சிறப்பான ஓர் மொழியையும்அதற்கேயுரியபண்பாட்டுத்தளத்தில் இருந்து வெளிப்படுத்தவில்லை. இதற்கான பிரதான காரணம் கூப்பிடு துாரத்தில் மிகப் பிரமாண்ட திரைப்பட வல்லரசான தமிழ் நாட்டுத் திரைப்பட வலயமே. அத்துடன் உள்ளுர் தமிழ் சினிமாவை மேம்படுத்தும் ஓர் வழிமுறையாக தமிழ் கலாச்சாரத்தின் முக்கியத்துவம், மற்றும் உயிர்த்துடிப்பு போன்றனவற்றில் அக்கறை இன்மையும் ஓர் பிரதான காரணம். அத்துடன் எமது கலாச்சார, இலக்கிய மதீப்பீடுகளுக்காக இந்தியாவையே நாம் சார்ந்திருக்கினறோம். இப்படங்கள் தமிழ், உயர் சாதிய மதீப்பீடுகளை மையமாகக் கொண்டே வெளிவந்தன.

1980களின் பின்னர் பல படங்கள் வெளி வந்துள்ளன. இவற்றில் பல போர், வீரம், அழிவு, துயரம் போன்றவற்றை வெளிப்படுத்தின. இவற்றின் தலைப்புக்களே இவற்றிக்கு சாட்சியம். இது எங்கள் தேசம், தமிழோசை, தாயகக் கனவு போன்றன.

இவற்றின் வழியில் இனப்பிரச்சினையை மையமாகக் கொண்டு சில படங்கள் தமிழ் நாட்டில் இருந்து வெளிவந்தன. கன்னத்தில் முத்தமிட்டால், காற்றுக்ககென்ன வேலி போன்னறன. இதில் கன்னத்தில் முத்தமிட்டால் இலங்கையில் படமாக்கப்பட்டது. இவை வியாபாரத்தை மையமாகக் கொண்டவை. இவ்வழி தொடரும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர்கின்றது.

போர் பற்றிய படங்கள் பல படிகளில் படைக்கப்படுகின்றன. போருக்கான தயாரிப்பு, போர் நடை பெறும் பொழுது பொது மக்களின் ஆதரவை திரட்டும் முயற்சியாக படங்களை தயாரித்தல், போரின் பின்னர் (போரின் தோல்வியை மக்களின் மனதிலிருந்து தவிர்க்க) வீர சாகச படங்கள், (Ramboo and other Vietnam Movies, Born on the Fourth of July (1989)) போர் பற்றிய விமர்சனப் படங்கள் (Why We Fight, போன்ற படங்கள்). அமெரிக்க படங்களின் பின்னணயில் அமெரிக்க உளவுப்படையும் உள்ளது. அத்துடன் உளவுப்பிரிவின் நிதி உதவியும் கிடைக்கப்பெறுகிறது.

கடந்த வாரம் ஆணி வேர் என்ற படத்தை பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. இப்படம் பற்றிய கருத்துக்களுக்கு முனபாக, 1987 ம் ஆண்டு வெளிவந்த Cry Freedom என்ற ஆங்கிலப் படத்தை பார்ப்பது அவசியம். இதனை நெறியாள்கை செய்திருந்தவர் Richard Attenborough காந்தி பட இயக்குனர். தென் ஆபிரிக்காவில் Donald Woods (Kevin Kline) என்ற வெள்ளை இன பத்திரிகையாளர், Biko (Denzel Washington) என்ற கறுப்பின போரளியை சந்திக்க செல்கின்றார். பைக்கோ, வூட்சை ஏற்கனவே நிற வெறியாளர் என விமர்சனம் செய்துள்ளார். இச் சந்திப்புக்கூடாக தென் ஆபிரிக்காவில் நடைபெற்ற இனவெறி சம்பவங்களை பதிவு செய்துள்ளனர். இப்படத்தில் நடித்தவர்கள் பெரும்பாலானவர்கள் ஹொலி வூட் நடிகர்கள். இயக்குனர் ஒஸ்கார் விருது பெற்ற இயக்குனர். இப்படத்தையும் பெரும்பாலான விமர்சகர்கள் இனப் பிரச்சினையை ஹொலீ வூட் தனமாக்கி விட்டார்கள் என விமர்சித்திருந்தார்கள். தென் ஆபிரிக்கா பிரச்சினை உலகறிந்தது. ஒரு திரைப்படத்துக்கூடாகத்தான் வெளிக்கொணர வேண்டும் என்ற நிலை இருக்கவில்லை.

போர் நிலைப்படங்களிலும், இன - நிற வாதப் படங்களிலும் பொதுவாக ஓர் பத்திரிகையாளர் உள்ளே செல்வார், அவரைத் தொடாந்து பிரச்சினைகளும் தொடரும்..

அவ்வாறு தொடர்ந்த பெண் பத்திரிகையாளர் ஒருவரது பதிவுகள் ஆணி வேர் என்ற படமாக மலர்ந்துள்ளது. இப்படம் மிக முக்கியமானது.

பெண் பத்திரிகையாளர் தமது தோழர் வைத்தியரைத் தேடி தமிழ் பிரதேசத்துக்கு செலகிறார். அவரது நினைவுகள் பின்னோக்கிச் செல்கின்றன. முதன் முதலில் இவர் இப்பிர தேசத்துக்கு வந்த பொழுது தனது பத்திரிகையின் முன் பக்க கட்டுரைக்காக சுவையான சுவையான சம்பவங்களையும், படங்கைளையும் தேடிச் செல்கிறார். இத்தேடலில் சேவை மனப்பான்மை உள்ள வைத்தியரைச் சந்திக்கிறார். இந்த இளம் வைத்தியர் முதலில் திட்டுகிறார். "எங்களது துயரங்களையும், சுமைகளையும் சுவைக்கும் பண்டமாக்குகிறீர்கள்" என்ற பொருள் பட. பின்னால் இந்த பத்திரிகையாளர் சந்திக்கும் சம்பவங்களளால் இவருக்கும் வைத்தியருக்கும் நெருக்கம் உண்டாகிறது. வைத்தியரின் பாட்டி பத்திரிகையாளரை தனது பேரனை திருமணம் செய்யுமாறு கேட்கின்றார்.

இப்பொழுது இவர் வைத்தியரைத் தேடி அலைகின்றார். இறுதியில் ஒரு சம்பவத்தில் வைத்தியர் கொல்லப்பட்டதாக உறுதி செய்யப்ப டுகிறது. மீண்டும் இந்தியா திரும்ப வெளிக்கிடும் பொழுது நடைபெறும் சம்பவத்தில் வைத்தியர் மீண்டும் கிடைக்கப் பெறுகிறார்.

இப்படத்தின் பார்வையாளர்கள் யார்? புலம் பெயர் தமிழர்களா? வேற்று இனத்தவரா? ஆரம்பத்தில் வைத்தியர் கூறுவது போல் எமது துயரங்கள் சம்பவங்கள் விற்பனையா?

வெவ்வேறு கால கட்டங்களில் நடைபெற்ற சில சம்பவங்களின் தொகுப்பாக உள்ளது இப்படம். இந்த சம்பவங்களுக்கு மிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண வெளியேற் றம், கிருபாசாந்தி கொலை, பள்ளிச் சிறுவர் கொலை போன்ற சம்பவங்கள் படமாக்கப்பட்டு உள்ளன. இந்த சம்பவங்களின் போதும் பின்னாலும் விடுதலைப் புலிகளை காணவில்லை. இது ஏன்? உண்மை நிலை அது தான். மக்களுடன் ஒரு பொழுதும் புலிகள் இருக்கவில்லை.

வைத்தியர் பேசும் வீர வசனங்கள் கூட்டணி காலத்தை நினைவூட்டுகின்றன. மிக அதீதத் தனமாகவும் உள்ளது. இறுதியில் வைத்தியர் கொல்லப்பட்டதாக உறுதியாக சொல்லப்படுகிறது. ஆனால் அவர் உயிருடன் உள்ளார். இது கதைக் குழப்பமா? இலலையேல் கணணி குறைபாடா? இல்லையேல் இது தான் யதார்த்தமா? காசுக்கணக்கு மாத்திரம் சரியாக பெற்றுக் கொள்வார்கள்.

பெண் பத்திரிகையாளர் மதுமிதா, காதில் ஓர்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்ரன் பாலசிங்கம் - இளையதம்பி ரட்ணசபாபதி - மகா உத்தமன்

# தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் லண்டன் தடங்கள்

ரி கொன்ஸ்ரன்ரைன் & த ஜெயபாலன்



காலம்சென்ற அன்ரன் ஸ்ரானிஸ்லஸ் பாலசிங்கத்தின் (படம்) 30 வருட கால அரசியல் வாழ்க்கை தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் இரண்டறக் கலந்தது என்றால் அது மிகையாகாது. ஆயுதப்போராட்டம் ஆரம்பித்தது முதல் இறக்கும் வரை தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்வரிசை உறுப்பினர் பாலசிங்கம். அவரின் ஈடுபாடு தனித்துவமானது, ஈடற்றது. அதற்கும் மேலாக விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அவர் யாராலும் நிரப்பப்பட முடியாத வெற்றிடமாகும்.

ஈழமக்களின் ஆயுதப்போராட்டம் எழுபதுக்களில் பரிணமிக்க ஆரம்பித்தது. அப்போது சர்வதேச அரங்கில் ஏற்பட்ட கம்யூனிஸ அலை இலங்கைத் தீவின் கரைகளிலும் அடித்தது. ஜேவிபி ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்து தோல்வி கண்டபோதும் ஆயுதப் போராட்டம் தொடர்பான சிந்தனை ஆழமாக விதைக்கப்பட்டது.

இலங்கை அரசின் ஒடுக்கு முறைக்கு எதிராக இளைஞர்கள் குழுக்களாக இயங்க ஆரம்பித்தனர். இக்குழுக்கள் மாணவர் பேரவை, இளைஞர் பேரவை என அமைப்பு வடிவம் பெற ஆரம்பித்தது. இவர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகள் அரசாகச் செயற்பட்ட ஆளும்கட்சி அரசியல்வாதிகளுக்கு எதிராகவும் அரசின் பாதுகாவலர்களாக இருந்த பொலிசாருக்கு எதிராகவும் திரும்பியது. உரும்பிராய் பொன்னுத்துரை சிவகுமாரனின் வீரமரணத்தை (யூன் 05, 1974) தொடர்ந்து ஏற்பட்ட உணர்வு, உத்வேகம், இவையெல்லாவற்றிற்கும் மேலாக அமிர்தலிங்கம் தலைமையிலான கூட்டணியில் ஏற்பட்ட விரக்தி என்பன இளைஞர்களை ஆயுதங்களை நோக்கித் திசை திருப்பியது.

கூட்டணியினரின் ஆவேச பேச்சுக்கள் இளைஞர்களில் இரத்த ஓட்டத்தை அதிகரிக்க வைத்ததே தவிர, அவை இளைஞர்களை வழி நடத்த தவறின. ஒருபுறத்தில் உண்ணாவிரதம், எதிர்ப்பு போராட்டம் என்ற காந்திய அகிம்சை போராட்ட அணுகுமுறைகள். அதேவேளை மறுபுறத்தில் பல அரசியல் கொலைகளுக்கு கூட்டணியினரின் முக்கிய தலைவர்கள் அளித்த பங்கு, தமிழர் விடுதலைக் கூட்டணியை ஒரு சாத்வீக அமைப்பாகவோ அன்றி ஒரு தீவிர போராட்ட அமைப்பாகவோ அல்லாமல் ஒரு சந்தர்ப்பவாத அரசியல் கட்சியாக அடையாளப்படுத்த காரணமாயிற்று.

யூன் 14 1975ல் வேகமாக மாறி வந்த அரசியல் சூழலில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் (TLO) அங்குரார்ப்பணக் கூட்டம் யாழ் ஆனைப் பந்தியில் இடம்பெற்றது. இந்த காலகட்டத்தில் யூலை 27 1975ல் பிரபாகரன் பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில் முன்பாக அப்போதைய யாழ் மேயர் அல்பேட் துரையப்பாவை சுட்டுக் கொன்று விட்டு, TNT (Tamil New Tigers) புதிய தமிழ் புலிகள் என எழுதிப்போட்டு விட்டுத் தப்பிச் சென்றார்.

இது தமிழீழ போராட்டத்தில் ஆயுதத்தின் பங்களிப்பை பிரபல்யப்படுத்த தொடங்கியது. ரிஎன்ரி யின் ஆரம்ப உறுப்பினர்களாக பிரபாகரன், குட்டிமணி, நாகராஜா, செட்டி ஆகியோர் முன்னணியில் இருந்தனர். இவர்கள் அனைவருக்கும்

www.tamilarangam.net

விடுதலைக் கூட்டணித் தலைவர்களின் நேரடித் தொடர்பு இருந்தது. ரிஎன்ரி இயக்கம் எவ்வித அரசியல் சித்தாந்த கோட்பாடுகளும் இல்லாத ஒரு நேரடி நடவடிக்கை குழுவாகவே பரிணாமம் பெற்று பிரபல்யம் அடைந்தது. மே 5 1976ல் புதிய தமிழ் புலிகள் அமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகள் என பெயர்மாற்றம் செய்யப்பட்டது.

இந்த கால கட்டத்தில் இலங்கையில் இருந்து பல்லாயிரம் மைல்கள் தொலைவில் உள்ள லண்டன் சீமைக்கு வந்து கல்வி கற்பது யாழ்ப்பாண நடுத்தர வர்க்க இளைஞர்களின் உயர் கனவாக இருந்தது. இதன் அடிப்படையில் வசதிபடைத்த நடுத்தர குடும்பத்தினர் பலர் தமது பிள்ளைகளை லண்டனுக்கு அனுப்பி படிப்பித்தனர். இவ்வாறு லண்டனுக்கு வந்தவர்களில் சிலர் இளைஞர் பேரவையில் அங்கம் வகித்திருந்தனர். சிறிலங்கா பொலிசாரினால் பாதிக்கப்பட்டவர்களும் இதில் அடங்கினர். இவ்வாறு லண்டனில் பரிணமித்த தமிழ் தீவிர அரசியலின் ஆரம்ப முக்கிய உறுப்பினர்களாக நாராயணதாஸ், அன்ரன் பாலசிங்கம் (டிசம்பர் 14 2006ல் காலமானார்), ரட்ணசபாபதி (டிசம்பர் 12 2006ல் காலமானார்), மகா உத்தமன் (ஒக்ரோபர் 29, 2006ல் காலமானார்), மஹரசிங்கம், டொக்டர் ஆறுமுகம் ஆகியோர் இருந்தனர்.

இதில் நாராயணதாஸ் (கனகேந்திரன் - 'வீடு' படத்தின் தயாரிப்பாளர்) இளைஞர் பேரவையின் ஆரம்ப கால உறுப்பினராக இருந்து சிறிலங்கா பொலிசாரின் கடுமையான சித்திரவதைக்கு உள்ளாகி பின்னர் மாணவனாக லண்டன் வந்து கல்வி கற்றார். இவர் 1977ம் ஆண்டில் லண்டனில் தமிழர் விடுதலை இயக்கத்தை (TLO) இயக்கினார். இவர் தற்போது கனடாவில் வசித்து வருகிறார்.

மகா உத்தமன் முதலில் இலங்கையில் இருந்து புலமைப்பரிசில் பெற்று அமெரிக்காவில் கல்வி கற்க சென்றவர். பின்னர் சிறிது காலம் கனடாவில் வசித்து 1977ல் லண்டன் வந்து குடியேறியவர்.

பாலசிங்கம் South Bank Polytechnic (தற்போது University) இல் சமூகவியல் ஆய்வு செய்து கொண்டிருந்தார். நாராயணதாஸிற்கும் பாலசிங்கத்துக்கும் இடையிலான தொடர்பு South Bank Polytechnic இல் தான் ஆரம்பமாகியது. நாராயணதாஸ் பாலசிங்கத்தை TLO உறுப்பினர் களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

அன்று படிப்பதற்காக student விசாவில் வந்த இளைஞர்களை விட பாலசிங்கத்தின் லண்டன் வாழ்க்கை வசதியாகவும் வித்தியாசமாகவும் இருந்தது. பாலசிங்கம் லண்டனுக்கு வருவதற்கு முன் வீரகேசரி பத்திரிகையில் பணியாற்றினார். பின் பிரித்தானிய தூதராலயத்தில் மொழி பெயர்ப்பாளராக கடமையாற்றியதால் இங்கிலாந் தில் நிரந்தரமாக வாழ்வதற்கு அனுமதி கொடுக்கப்பட்டு இருந்தது. எனவே ஏனையோரைப் போல் பாடசாலைக்குப் போய் Home Officeக்குப் போய் விசா எடுக்க வேண்டிய அவசியம் பாலசிங்கத்துக்கு இருக்கவில்லை.

மேலும் பாலசிங்கம் மிகவும் உதவி செய்யும் மனப்பான்மை கொண்டவர் என்பதாலும் நகைச் சுவையாக பேசி இளைஞர்களுடன் இலகுவாக பழகும் சுபாவம் கொண்டவர் என்பதாலும் மதுபானம் உட்கொள்பவர் என்பதாலும் இயற்கை யாகவே லண்டன் தமிழ் இளைஞர்கள் மத்தியில் மிகவும் பிரபல்யமான பரிட்சயமான ஒருவராக இருந்தார்.

அன்றைய சர்வதேசச் சூழல் கல்விச் சமூகத்திடம் இடதுசாரிச் சிந்தனைகளை வளர்த்திருந்தது. படிப்பதற்கு லண்டன் வந்த யாழ் நடுத்தர வர்க்க இளைஞர்களும் அதற்கு விதிவிலக்காகவில்லை. ரட்ணசபாபதி, மாகா உத்தமன், பாலசிங்கம் ஆகியோரும் அதற்கு விதிவிலக்காகவில்லை. இவர்கள் தமிழீழ போராட்டத்தில் ஈடுபடுவதற்கு முன்பே கொம்யூனிஸ்ட் சிந்தனைகளில் மிகவும் கவரப்பட்டனர். மகா உத்தமனுக்கும் பாலசிங்கத் துக்கும் ஆரம்ப காலகட்டத்தில் கொம்யூனிச சிந்தனையில் இருந்த ஈடுபாடு ஈழப்போராட்ட ஈடுபாட்டை விட அதிகம் என்று தான் சொல்ல வேண்டும். அதனால் பாலசிங்கம், மகாஉத்தமன் ஆகியோரின் அரசியல் பார்வை ஏனைய தமிழ் இளைஞர்களின் பார்வையில் இருந்து வேறுபட்டு, ஒரு சித்தாந்த அடிப்படையிலேயே இருந்தது. மகா உத்தமனும் பாலசிங்கமும் இணைந்து NEXES என்ற பத்திரிகையை வெளியிட்டனர்.

விடுதலைப் புலிகளது மிக ஆரம்ப வெளியீடுகளான 'சோசலிச தமிழீழம் நோக்கி' போன்றன அப்போது விடுதலைப் புலிகளுடன் இருந்தவர்களின் கொம்யூனிஸ சிந்தனையின் பிரதிபலிப்பே. அந்தச் சிந்தனைமுறையின் ஆயுட்காலம் மிகவும் குறைவானதாகவே இருந்தது. காரணம் கொம்யூனிச சிந்தனை உடையவர்கள் (நிர்மலா, நித்தியானந்தன்) வெளியேறியமை யும் பாலசிங்கம் சிந்தனையை மாற்றி கொண்டதுமே.

இரட்ணசபாபதி EROS ஐ ஸ்தாபித்தார். இதற்கு பெரும் உறுதுணையாக சங்கர் ராஜியும்

www.tamilarangam.net

இருந்தார். மகா உத்தமன் ஈரோசுடன் இணைந்து மிகத் தீவிரமாகப் பணியாற்றினார். ரட்ணசபாபதி பலஸ்தீன விடுதலை இயக்கத்தினருடன் தனக்கு ஏற்பட்ட தொடர்பை பாவித்து முதன் முதலாக தமிழ் இளைஞர்களுக்கு வெளிநாடுகளில் ஆயுதப் பயிற்சியை தொடக்கி வைத்தார்.

நாராயணதாஸ், மகா உத்தமன், ரட்ண சபாபதிக்கு இணையாக அக்காலத்தில் ஈழப் போராட்டத்தில் ஈடுபாட்டு இருந்தவர் பாலசிங்கம். நாராயணதாஸின் தலைமையில் இயங்கிய TLO அமைப்பு மற்றும் ரட்ணசபாபதி தலைமையில் இயங்கிய EROS அமைப்பின் உறுப்பினர்களுக்கு பாலசிங்கம் லண்டனில் கொம்யூனிச சிந்தனை களை ஊட்டுவதில் அக்கறை காட்டினார். பாலசிங்கம் TLO உடனோ EROS உடனோ தன்னை முழுமையாக அடையாளப்படுத்தாமல் இருந்தார். 'Open letter to Mr Amirthalingam' என்று EROS வெளியிட்ட பிரசுரம் பாலசிங்கத்தினாலேயே எழுதப்பட்டது.

அந்தக் காலகட்டத்தில் ஜேவிபியினரின் இனவாத கொம்யூனிச சித்தாந்தத்தை அடையாளம் காட்டுவதில் பாலசிங்கம் மிகவும் கவனம் செலுத்தி உள்ளார். பாலசிங்கத்தின் பேச்சு ஆரம்பகாலத்தில் ஜேவிபியினரை அடையாளப்படுத்துவதிலேயே முக்கிய கவனம் செலுத்தியது.

பாலசிங்கம் அன்றைய லண்டன் தமிழர் மத்தியில் பிரபல்யமாவதற்கும் மதிக்கப்படுவதற் கும் பல காரணங்கள் இருந்தன. பாலசிங்கத்தின் முதல் மனைவி வாகரையை சேர்ந்தவர். இவர் இளவயதில் சுகயீனமுற்று லண்டன் மருத்துவ மனையில் மரணம் அடைந்தார். பாலசிங்கம் தனது முதல் மனைவியை வைத்தியசாலையில் வைத்து பராமரித்த விதம் அங்கு தாதியாக பணிபுரிந்த அடேல் இன் கவனத்தை ஈர்த்தது. அடேல், பாலசிங்கத்தினால் மிகவும் கவரப்பட்டு பின்னர் அவரையே மணம் முடித்தார்.

பாலசிங்கத்தைப் போலவே அடேலும் அனைவ ருடனும் சரளமாக, அந்நியோன்னியமாக பழகும் சுபாவம் கொண்டவர். ஆகவே பாலசிங்கம் அவர்களின் Stockwell flat லண்டன் தமிழர்களின் அரசியல் குகையாக மாறியது. திருமதி அடேல் பாலசிங்கம் இரவில் வேலைக்குப் போக லண்டன் ஈழப்போராளிகள் ஸ்ரொக்வெல் பிளாற்றுக்குப் போய் சமா வைப்பது ஒரு வழமையான நடவடிக்கையாகிப் போனது.

1975ம் ஆண்டில் யசீர் அரபாத் தலைமையில் இயங்கிய (PLO) பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் FATA ஆயுதப்பிரிவின் லண்டன் பிரதிநிதியாக இருந்த செயிட் ஹமானி என்பவருக்கும் ரட்ணசபாபதிக்கும் நேரடி நட்பு ஆரம்பமாகியது. இத்தொடர்பை பயன்படுத்தி முதன்முதலாக ரட்ணசபாபதி லண்டனில் அக்கறையாக செயல்பட்ட சிலரை லெபனானிற்கு ஆயுதப்பயிற்சிக்கு அனுப்பிவைத்தார். இதில் லண்டனிலிருந்து ராஜ்குமார், ஜெயக்குமார், தம்பையா, அருள், பத்மநாபா (காலம் சென்ற ஈபிஆர்எல்எப் தலைவர்) ஆகியோர் சென்றனர். இவர்கள் லெபனானில் பயிற்சி எடுக்கும் போது ரட்ணசபாபதி வவுனியாவில் கண்ணாதிட்டி என்ற விவசாய பண்ணையை தெரிவு செய்தார். இந்த பண்ணை அருளரின் தகப்பனுக்கு சொந்தமானது. லெபனான் சென்று பயிற்சி முடித்துவிட்டு லண்டன் திரும்பிய அனைவரையும் ரட்ணசபாபதி போராட்டத்தில் ஈடுபடுவதற்கு கண்ணாதிட்டி பண்ணைக்கு அனுப்பி வைத்தார்.

இவ்வாறு முதலில் லெபனான் சென்று பின்னர் கண்ணாதிட்டிக்கு சென்றவர்கள் தான் ஈரோஸ் அமைப்பின் மாணவர் பிரிவான GUES (Genaral Union of Elam Students) இன் முதல் உறுப்பினர்கள் ஆவர். லெபனானில் பயிற்சிகளை ஒழுங்குபடுத்திய ரட்ணசபாபதிக்கு ஈழத்தினுள் ஆயுதங்களை அனுப்ப முடியவில்லை. இதனால் லெபனானில் பயிற்சி பெற்ற அனைவரும் கண்ணாதிட்டியில் விறகுத்தடிகளை தூக்கி ஏதோ தங்களுக்கு முடிந்த பயிற்சிகளில் ஈடுபட்டு ரட்ணசபாபதியின் ஆயுதங்களுக்காக காத்திருந்தனர். இவர்களின் நடமாட்டத்தில் சந்தேகம் கொண்ட உள்ளுர்வாசிகள் சிலர் இது பற்றி பொலிசுக்கு அறிவிக்க அனைவரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் விடுவிக்கப்பட்டவுடன் அவர்கள் மீண்டும் லண்டன் வந்து சேர்ந்தனர். விரக்தியில் லண்டன் வந்த GUES உறுப்பினர்கள் அனைவரும் முழுமையாக பிரிந்து இயங்க ஆரம்பித்தனர். பத்மநாபா டக்ளஸ் தேவானந்தாவுடன் இணைந்து EPRLF - ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை ஸ்தாபித்து EROS இல் இருந்து பிரிந்து சென்றவர்களை ஒருமுகப்படுத்தினார்.

இதன்பின் ரட்ணசபாபதியால் ஸ்தாபிக்கப்பட்ட நுசுழுளு அமைப்பு 100 மைல் வேகத்தில் இருந்து 10 மைல் வேகத்துக்கு வந்தது. இவ்வாறு லண்டனில் ஆரம்பிக்கப்பட்ட ஈழ அரசியலின் உத்வேகம் ஒரு ஸ்தம்பித நிலைக்கு வந்தது.

www.tamilarangam.net

மறுபுறத்தில் இலங்கையில் 1977 (ஒகஸ்ட் 16) கலவரமும் அதனைத் தொடர்ந்த வடுதலை எழுச்சியும் மேலோங்கியது. 1979 யூலையில் பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் கொண்டுவரப்பட்டு தமிழ் இளைஞர்களுக்கு எதிரான அரசின் வன்முறை பெருகியது. பிரபாகரன், ஊர்மிலா, இராகவன், சுந்தரம், ஐயர் ஆகிய விடுதலைப் புலிகள் இந்தியாவுக்கு சென்றனர். இவர்கள் அங்கு ஏற்கனவே தங்கியிருந்த உமாமகேஸ்வரன், நாகராஜா ஆகிய விடுதலைப் புலி உறுப்பினர் களுடன் தங்கினர்.

இச்சமயத்தில் பிரபாகரனுக்கும் உமாமகேஸ் வரனுக்கும் இடையே ஏற்பட்ட மனக்கசப்பு பாண்டி பஜாரில் உமாமகேஸ்வரன் மீது துப்பாக்கிச் சுடு நிகழ்த்தும் அளவிற்குச் சென்றது. விடுதலைப் புலிகள் உமா குழு, பிரபா குழு எனப் பிரிந்தது. இவர்களை இணைத்து வைக்க பாலசிங்கம் இந்தியா சென்றார். பாலசிங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து சமாதான முயற்சிகளும் பலனளிக்காமல் போனது. உமாமகேஸ்வரன் விடுதலைப் புலிகளில் இருந்து பிரிந்து சென்று PLOT (People Liberation Organization for Tamileelam - தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்) அமைப்பை ஆரம்பித்தார்.

அதே நேரம் மகா உத்தமன் PLO கூட்டில் இருந்த இரண்டாவது பெரிய இயக்கமான PFLP (Popular Front for the Libaral of Palastine) உடன் தொடர்பை ஏற்படுத்தினார். PFLP யின் முக்கிய ஸ்தலமாக சிரியா இருந்தது. அதில் மார்க்சிச சிந்தனை கொண்ட PFLP யின் சிரியாவை சேர்ந்த லண்டன் பிரதிநிதி டாக்டர் ஜோர்ஜ் அபாஸ் உத்தமனுக்கு நெருக்கமானார்.

'எல்லோரையும் இணைக்கிறேன் பார்' என்று சொல்லிவிட்டு இந்தியா சென்ற பாலசிங்கம் பிரபாகரனால் கவரப்படுகிறார். பிரபாகரன் பாலசிங்கம் இணைப்பிற்கு இரு காரணங்கள் கூறப்படுகின்றது. ஒன்று EROS, EPRLF இல் இருந்த அனைவரும் மார்க்சிசத்தில் ஊறித் திளைத்தவர்கள். செயற்பாட்டை விட கதையில் உச்சமானவர்கள். இவர்கள் 'பாலா அண்ணா'வின் கதையை கைகட்டிக் கேட்கப் போவதில்லை. அது பாலசிங்கம் அவர்களுக்கு நன்கு தெரியும். அதற்கு மாறாக பிரபாகரன் நடைமுறையில் காட்டுபவர். மேலும் அவருடன் இருப்பவர்கள் 'பாலா அண்ணா'வின் கதையை கைகட்டியிருந்து கேட்கக் கூடியவர்களாக இருந்தனர். அவர்களுடன் மகா உத்தமன், ரட்ணசபாபதி போல் உலக அரசியல் தெரிந்தவர்கள் அத்தருணத்தில் அங்கிருக்கவில்லை. பாலசிங்கத்திற்கு போட்டியும் இருக்கவில்லை. அதனால் பாலசிங்கம் பிரபாவுடன் இணைவதையே விரும்பி இருக்கலாம்.

அல்லது பிரபாகரனின் அதிரடித் தாக்குதல் ஸ்டைல்களினால் கவரப்பட்டிருக்கலாம். பிரபா கரனுக்கும் ஈரோஸைப் போல் அரசியல் பலம் தேவைப்படுவதால் பாலசிங்கத்தை உள்வாங்கிக் கொண்டிருக்கலாம். இவை ஆய்வுக்குரியவையே. முடிவானவை அல்ல.

எது எப்படியோ எல்லோரையும் சேர்த்து வைக்கிறேன் என்று புறப்பட்ட பாலசிங்கம் பிரபாகரனின் விடுதலைப் புலிகளின் அதீத விசுவாசியாக திரும்பி வந்தார். இது லண்டனில் இருந்த GUES இயக்கத்திற்கு பலத்த ஏமாற்றத்தை கொடுத்தது. பாலசிங்கத்தின் மன மாற்றம் பலரை சங்கடத்தில் ஆழ்த்தியது. பாலசிங்கத்தின் மாற்றத்திற்கான காரணத்தை அறிய லண்டனில் இருந்த GUES உறுப்பினர் குலம் என்பவர் வைன் போத்தலுடன் ஸ்ரொக்வெல் பிளாற்றுக்குப் போகும் போது பாலசிங்கம் சிரித்துக்கொண்டு கேட்டாராம். "டேய் தம்பி குலம் சாராயம் கொடுத்து பூராயம் கேட்கவா வந்தனீ" என்று.

இதற்கிடையே மகா உத்தமன் பிரபாகரனுடன் இருந்து பிரிந்த உமாமகேஸ்வரனுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார். பின்னர் உத்தமன் உமாமகேஸ்வரனுடன் சேர்ந்து சிரியாவிற்கு சென்று ஆயுதப் பயிற்சிகளுக்கான தொடர்பை ஏற்படுத்திக் கொண்டனர். பின்னைய காலங்களில் டக்ளஸ் தேவானந்தா, சின்னவன், பாலா சிரியா லெபனான் சென்று பயிற்சிகள் பெற்றனர்.

1980க்குப் பின்னர் LTTE, PLOT, EPRLF, EROS, TELO என்ற இயக்கங்கள் உறுதியாகச் செயற்பட ஆரம்பித்தன. பிற்காலங்களில் விடுதலைப் புலிகள் ஏனைய அமைப்புகளை அழித்து தம்மை தம்மை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக அறிவித்ததும் அதன் பின்னான நிகழ்வுகளும் அதில் பாலசிங்கத்தின் பங்களிப்பும் அவர் பற்றிய மதிப்பீடும் தனியாக ஆராயப்பட வேண்டும்.

தமிழீழ அரசியலில் ஆளுமை செலுத்திய இம்மூவருமே இயற்கை மரணத்தைத் தழுவியது அவர்கள் லண்டனில் வாழ்ந்ததாலேயே சாத்திய மானது. தமது குடும்ப நலன்களைக் கவனிக்காமல், இறுதி மூச்சுவரை தமது இலக்கை நோக்கி பயணித்தவர்கள் இவர்கள். இவர்கள் மூவரினதும் பங்களிப்பு மதிப்பிற்குரியது. ☑

www.tamilarangam.net


மக்கள் சேவையே
அப்பன் விநாயகன் சேவை

# சமூகப்பணிகளில்
## கற்பக விநாயகர் ஆலயம்

£40000 தாயகத்திற்கு அனுப்பி உதவியது.
( கார்ள்டன் ரவல்ஸின் உதவியுடன் )

திருக்கோயிலில் உள்ள குருகுலத்தில் 36 சிறார்களை ஆலயம் பராமரிக்கிறது.

தேர்த்திருவிழாவில் சேரும் நிதி வெண்புறாத் திட்டத்திற்கு வழங்கப்படுகிறது.

மட்டக்களப்பில் £27000 செலவில் முதியோர் இல்லம்

தமிழ் தேசிய விளையாட்டுச் சங்கத்திற்கு £2000 வழங்கப்பட்டது.

மூத்தோர் நலன்புரி நிலையம் நடாத்தப்படுகிறது.

இலக்கிய முயற்சிகளுக்கு உதவி வருகிறது.

உங்கள் பங்களிப்பைச் செய்ய விரும்புபவர்கள்
கற்பக விநாயகர் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.
2 - 4 Bedford Rd, Walthamstow, London, E17 4PX

Tel : 020 8527 3819

www.tamilarangam.net

# மத்திய கிழக்கு

## போர் மேகங்கள் கலையாது

**கோபால் (மும்பாய்)**

செப்ரம்பர் 2004ம் ஆண்டு ஐ.நா சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண் 1559ன் படி லெபனானின் நிலப்பரப்பில் தங்கி இருக்கும் லெபனானிய, லெபனானியமல்லாத அனைத்து குழுக்களும் நிராயுதபாணியாக்கப்பட வேண்டும். இந்த தீர்மானத்தை முன்வைத்த நாடுகள் அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகும். அதாவது லெபனானியமல்லாத குழு என்பது இந்த ஏகாதிபத்திய நாடுகளைப் பொறுத்தவரை சிரியாவை மட்டுமே குறிக்கிறது. சிரியா லெபனானில் தங்கியிருந்த தனது படைகளை பின்வாங்க வேண்டும் என அழுத்தம் அளிக்க இந்த தீர்மானம் முன்வைக்கப்பட்ட அதே நேரத்தில் லெபனானில் தங்கியிருந்த இஸ்ரேலிய படைகளை திரும்பப்பெற எந்தவித அழுத்தமும் அளிக்கப்படவில்லை.

லெபனானை 1978ம் ஆண்டு மற்றும் 1982ம் ஆண்டு போரின் போது ஆக்கிரமித்த இஸ்ரேலிய படைகள் தொடர்ந்து கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக தென் லெபனானின் ஷீபா தோட்டப்பகுதி என்ற இடத்தை தன் கைவசம் வைத்திருந்தன. ஐ.நா தீர்மானம் 1559ன் கோரிக்கைக்கு இணங்கி சிரியா தனது படைகளை லெபனானில் இருந்து விலக்கிக் கொண்ட பின்னரும் இஸ்ரேல் தனது படைகளை திரும்பப் பெறவில்லை. ஐ.நா தீர்மானம் முன்வைத்த லெபனானிய குழுக்கள் என்பது ஹெஸ்புல்லா குழுவைத்தான் சுட்டிக்காட்டியது. ஹெஸ்புல்லா போராளிக்குழு 1967ம் ஆண்டு லெபனானின் மீதான இஸ்ரேலிய போர் மற்றும் ஆக்கிரமிப்புக்கு பின்னர் இஸ்ரேலிய படையை எதிர்த்து அணிதிரண்ட லெபனானிய மக்கள் படை. லெபனானிய மக்களின் பாதுகாப்புக்கு வேண்டி அந்நிய நாட்டு இஸ்ரேலிய பாசிச செயல்பாட்டுக்கு எதிராக அணிதிரண்ட உள்நாட்டு எதிர்ப்பு குழுக்கள் நிராயுதபாணியாக்கப்பட வேண்டும் என்கிறது ஐ.நா சபையின் அமைதிக்கான தீர்மானம்.

இஸ்ரேலிய படையினர் 82ல் லெபனானின் சப்ரா, ஷடில்லாவில் அகதி முகாம்களின் மீது நடத்திய படுகொலைகள் ஐ.நா சபையின் நினைவில் இருந்து மறந்துவிட்டது. ஏனெனில் படுகொலை செய்யப்பட்டவர்கள் வெள்ளை நிறத்தவர் அல்லவே முஸ்லீம்கள் தானே. தாம் முன்வைக்கும் தீர்மானங்களில் காணப்படும் இரட்டைத்தனத்தை சற்றும் குறையாகவோ நியாய மற்றதாகவோ இந்த அமெரிக்க மற்றும் பிரான்சு ஏகாதிபத்தியங்கள் காண தயாராகவில்லை.

இஸ்ரேலின் லெபனான் மீதான தாக்குத லுக்கு பின் அமெரிக்க காங்கிரஸ் செனற்சபையில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி உள்ளனர். அதன்படி ஐ.நா சபையின் பிரிவு 51 சட்டத்தின்படி தனது சுயபாதுகாப்பிற்காக அனைத்து நடவடிக்கை களையும் எடுப்பதற்கான உரிமையை இஸ்ரேல் பெற்றுள்ளது என்கிறது அத்தீர்மானம். அதன்படி லெபனானை இஸ்ரேல் தாக்குவதற்கு அனுமதிக்கிறது.

இனரீதியாகவும் மதரீதியாகவும் மிகவும் பிளவுபட்டுள்ள லெபனானின் அரசியல் சூழல் தொடர்ந்தும் நிலையற்றதாகவே உள்ளது. லெபனான் அரசு சிரியாவுக்கு ஆதரவாகவும் எதிராகவும் இரு துருவங்களாக நிற்கிறது. இந்நிலையற்ற தன்மையை ஹெஸ்புல்லாவின் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும் சிரிய சார்புக்கு எதிரான அரசியல் வாதிகளின் தொடர்ச்சியான படுகொலையும் (இறுதியாகக் (நவம்பர் 21ல் கொல்லப்பட்டவர் Pierre Gemayel) மேலும் நிலைகுலையச் செய்துள்ளது. அரச முடிவுகளில் தனக்கு வீற்டோ அதிகாரத்தைக் கேட்டு ஹெஸ்புல்லா போராட்டத்தில் குதித்துள்ளது. மேற்கு சார்பான கிற்ஸ்தவப் பிரிவையும் சிரியா சார்பான ஷியா முஸ்லீம் ஹெஸ்புல்லாவையும் ஐக்கிய லெபனான் அரசு ஒன்றிற்குள் ஐக்கியப்படுத்த அரபு லீக் மத்தியஸ்த முயற்சியில் ஈடுபட்ட உள்ளது. இந்த அரசியல் பதட்டம் எவ்வாறு தணிக்கப்படப் போகின்றது என்பது லெபனானின் அதிகாரச் சமநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. இஸ்ரேலின் நேரடித் தலையீட்டுடன் பல்வேறு நாடுகளின் தலையீடு உள்ள மத்திய கிழக்கிலும் இந்த அதிகார மாற்றம் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**ஒழுங்கீனம் இஸ்ரேல் நாட்டினுடையது என்றால் கண்டுகொள்ளாமல் இருப்பதும் ஹமாஸ், ஹெஸ்புல்லா போன்ற அமைப்புக்களினது என்றால் கண்டிப்பதாகவும் செயல்படுகிறது அமெரிக்க, பிரான்ஸ் ஏகாதிபத்தியங்கள்.**


பலஸ்தீனியர்கள் தங்கியிருந்த மேற்குக்கரை, காசாபிரிவு, கிழக்கு ஜெருசலம், கோலன் உயர்மட்ட பகுதி போன்ற இடங்களை இஸ்ரேல் ஆக்கிரமித்துக் கொண்டதை எதிர்த்து ஐ.நா பாதுகாப்பு சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் 465, 476ன் படி இஸ்ரேல் இப் பகுதிகளை ஆக்கிரமித்து அப்பகுதிகளில் தனது யூத மக்களை கொண்டு இட ஆக்கிரமிப்பு செய்வது கண்டிக்கப்பட்டது. மேலும் இது ஜெனிவா கன்வென்சன் முறைப்படி போர்க்காலத்தில் பொது மக்கள் பாதுகாப்பாக கவனிக்கப்பட வேண்டிய ஷரத்துக்களை மீறுவதாகவும் குறிப்பிடப்பட்டது. எனவே இஸ்ரேல் இவ்வாறு உருவாக்கிய புதிய setlementகளை உடனே எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டது. இன்று வரை இஸ்ரேல் எடுத்ததாக தெரியவில்லை. அதாவது ஒழுங்கீனம் இஸ்ரேல் நாட்டினுடையது என்றால் கண்டுகொள்ளாமல் இருப்பதும் ஹமாஸ், ஹெஸ்புல்லா போன்ற அமைப்புக்களினது என்றால் கண்டிப்பதாகவும் செயல்படுகிறது அமெரிக்க, பிரான்ஸ் ஏகாதிபத்தியங்கள்.

## ஹெஸ்புல்லா ஒரு தேசியவாத மதவாத அமைப்பு:

ஹெஸ்புல்லா ஒரு மதவாத அமைப்பு என்பதை நாம் மறுக்கமுடியாது. ஆனாலும் இது இஸ்ரேலின் லெபனான் தாக்குதலுக்குப் பின்னர் எழுந்த மக்கள் எதிர்ப்பு இயக்கமே. 1978ம், 1982ம் ஆண்டுகளில் இஸ்ரேலின் லெபனான் தாக்குதலில் லெபனானின் தென்பகுதியான ஷியா பெரும் சேதத்துக்குள்ளாகியது. இது இஸ்ரேலின் வசம் சிக்கி இஸ்ரேலின் பாதுகாப்புக்கு கீழ் அடங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டது. அப்போது சப்ரா, ஷட்புலா பகுதியில் உள்ள அகதிமுகாம் மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திய கோரத்தனமான படுகொலைத்தாக்குதலுக்கு ஆளாகி உயிரிழங்தவர்களின் நெருங்கிய உறவினர்கள் முதலில் ஹெஸ்புல்லா படையில் ஈர்க்கப்பட்டனர்.

பின்னர் படிப்படியாக லெபனான் ஷியா மக்களின் இடையில் குறிப்பாக ஏழை, எளிய மக்களிடையில் பெரும் செல்வாக்கு பெற்று தனக்கான கொரில்லா படையை நடத்தி வருகின்றது. இதன் ஆதரவாளர்கள் பெரும்பாலும் பலஸ்தீனிய அகதிமுகாமில் அடிப்படை வசதி, அரச பாதுகாப்பு ஏதுமின்றி வாழ்ந்து கொண்டு சட்டபூர்வ உரிமைகளுக்காக போராடி வரும் 40,000க்கும் மேற்பட்ட மக்களே. இது மட்டுமன்று, லெபனானிய பாராளுமன்ற தேர்தலில் 12 உறுப்பினர்கள், 2 கபினற் மந்திரிகள் தேர்வு பெற்றிருக்கும் அளவுக்கு இதன் செல்வாக்கு வளர்ந்துள்ளது.

2000ம் ஆண்டு இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களை தென் லெபனானில் இருந்து வெளியேற்றும் வரை ஹெஸ்புல்லா அமைப்பு கொரில்லா முறையில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து போரிட்டு வந்தது. 2000 ஆண்டு ஏற்பட்ட ஒரு உடன்பாட்டின் அடிப்படையில் இஸ்ரேல் அரசு லெபனானில் ஷீபா தோட்டப்பகுதி என்ற 25 கிலோமீற்றர் பகுதியை தவிர பிற பகுதிகளில் இருந்து தனது படைகளை பின்வாங்கிக் கொண்டது. தற்போது பாராளுமன்றத்தில் பங்கேற்ற பின்னும் ஹெஸ்புல்லா தனது படையை கலைத்துவிடவில்லை. ஷியா மக்களிடம் பெரும் செல்வாக்கை பெற்றிருந்த ஹிஸ்புல்லா 2005



www.tamilarangam.net

தேர்தலின் போது நிறுத்திய பிரதிநிதிகளில் 5பேர் கிறிஸ்தவர்கள், 3பேர் முஸ்லீம்கள், ஒருவர் டுடூஸ் இனத்தவர், 14 பேர் ஷியா வகுப்பினர் ஆவர். இதில் 12 பேர் தேர்வுசெய்யப்பட்டுள்ளனர். இன்று வரை ஹெஸ்புல்லா, லெபனானின் பிற இனத்தவர் மீது தாக்குதல் நடத்தியதாக வரலாறு இல்லை. இது மட்டுமல்ல, 1982ல் இஸ்ரேலுடன் சேர்ந்து ஷியா மக்கள் மீது தாக்குதல் நடத்திய தென்லெபனான் படையுடனும் ஹெஸ்புல்லா தனது இனவெறியை காட்டவில்லை.

## இஸ்ரேலிய அரசின் லெபனான் மீதான தாக்குதல்:

அமெரிக்கச் செய்திகளின் படி ஒக்ரோபர் 1973 தொடக்கம் மார்ச் 1978 வரை இஸ்ரேலின் தாக்குதலில் 2000க்கும் மேலான லெபனானிய மக்கள் உயிரிழந்து உள்ளனர். லெபனான் பதிவுகளின் படி 1968 தொடக்கம் 1974 வரை 300க்கும் அதிகமான இஸ்ரேலிய தாக்குதல்கள் நடத்தப்பட்டு 800க்கும் மேலான லெபனானியர் உயிரிழந்துள்ளனர். 1974ல் இஸ்ரேலின் தாக்குதலில் லெபனானில் நிறுவப்பட்டிருந்த ஒரு பலஸ்தீனிய முகாம் முற்றாக அழிக்கப்பட்டது. இவ்வாறு பலஸ்தீனிய அகதிகள் மீதான தாக்குதல் என்ற பெயரில் லெபனான் மீதும் தாக்குதல் நடத்தி லெபனான் மக்களுக்கும் பலஸ்தீனிய அகதிகளுக்கும் இடையில் பெரும் விரிசலை இஸ்ரேல் உருவாக்கியது.

இதனால் 1975ல் லெபனானின் வலதுசாரி அமைப்பான பாலங்கியர்களுக்கும் பலஸ்தீனிய முகாம் அகதிகளுக்கும் இடையில் பெரும் மோதல் ஏற்பட்டு3000க்கும்மேற்பட்ட அகதிகள் படுகொலை செய்யப்பட்டனர். இதை தீவிரப்படுத்த 1982ல் ஒரு நீண்ட போரை லெபனான் மீது இஸ்ரேல் தொடங்கியது. இப்போரின் அடிப்படை நோக்கம் பலஸ்தீனிய அகதிகளை தென் லெபனானில் இருந்து வடக்கு நோக்கி விரட்டுவதே. 3 வாரம் நீடித்த இப்போரில் 19,000ற்கும் அதிகமான லெபனானிய பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர். 70 வீதத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனிய முகாம் வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டன. அழிக்கப்படாத மிகுதி வீடுகளை இஸ்ரேலிய புல்டோசர்கள் இடித்து தள்ளின.

இதைவிட 17.09.82 அன்று சரோ, ஷட்புலா அகதிமுகாம் மீது தாக்குதல் நடத்தப்பட்டு 48 மணி நேரத்தில் 1500க்கும் மேலான அகதிகள் கொல்லப்பட்டனர். இது 1982 லெபனான் போரின் போது இஸ்ரேலுக்கும் PLOக்கும் நடந்த உடன்பாட்டின் படி PLO லெபனானை விட்டு வெளியேறிய சில தினங்களில் பாதுகாப்பு ஏதுமற்ற நிலையில் அகதிமுகாம் இருந்தபோது இத்தாக்குதல் நடத்தப்பட்டது. இதை இஸ்ரேலியர்களுடன் லெபனானிய கிறிஸ்தவ ஆயுதக் குழுக்களும் இணைந்து நடத்தின என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தற்போது லெபனான் மீது இரசாயண குண்டுகளையும் யுரேனியம் குண்டுகளையும் பொஸ்பரஸ் குண்டுகளையும் தாக்குதலில் பயன்படுத்தி உள்ளது இஸ்ரேல். பொஸ்பரஸ் குண்டுகள் உருவாக்கும் காயங்கள் தண்ணீர் ஊற்றி ஆற்றிவிடக் கூடிய சாதாரண காயங்கள் அல்ல. மேற்கூறிய குண்டு வீச்சுக்கள் சர்வதேச நடைமுறைக்குஅப்பாற்பட்டவையாகும்.இதைவிட பொலிமர் இணைப்பின் மூலம் தயாரித்த புதிய ரக குண்டுகள் சோதனைக்காக லெபனான் மக்கள் மீது பயன்படுத்தப்பட்டு உள்ளது. இஸ்ரேலிய ஏவுகணையில் பாவிக்கப்பட்ட இப்புதிய குண்டுகள் பெரிய கட்டடங்களை துளைத்து தகர்க்கும், நிலத்துக்கடியில் பதுங்கி பாதுகாத்துக் கொள்ள உருவாக்கப்பட்ட உறைவிடங்களை அழித்து ஒக்சிஜன் முழுவதையும் உறிஞ்சி மக்களை மூச்சுத் திணறடித்து இறக்கச் செய்யும். இதில் தாக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1200 என்று குறிப்பிட்டாலும் உண்மையில் இறந்தவர்களின் எண்ணிக்கை பல மடங்கு இருக்கக்கூடும்.

## போருக்காக கூறிய காரணங்களும் கூறப்படாதவையும்:

லெபனான் மீது போர் தொடங்க காரணமாக இஸ்ரேல் கூறுவது என்னவென்றால் 2 இஸ்ரேலிய படையினரை ஹெஸ்புல்லா கைது செய்து மறைத்து வைத்துள்ளமையேயாகும். அப்படியென்றால் இதுவரை இப்போரில் 51 இஸ்ரேலியர்களும் 33 இஸ்ரேலிய பாதுகாப்பு படையினரும் உயிரிழந்துள்ளதைப் பார்த்தால் இஸ்ரேலின் காரணம் நம்பக் கூடியதாக இல்லை. உண்மையிலேயே ஹெஸ்புல்லா 2 இஸ்ரேலிய வீரரை கைது செய்திருந்தாலும் இது ஒன்றும் புதிதல்லவே. இதற்கு முதல் 2004 ஜனவரியில் ஹெஸ்புல்லாவும் இஸ்ரேலும் ஒரு சிறைக்கைதியை கைமாற்றிக் கொள்ள உடன்பாடு செய்துகொண்டனர். அப்போது ஒரு இஸ்ரேலிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உளவுப்பிரிவைச்சேர்ந்தவரையும்கொல்லப்பட்ட2 இஸ்ரேலியப் படையினரின் உடலையும் திரும்பப் பெறுவதற்கு இஸ்ரேலில் சிறைவைக்கப்பட்டிருந்த 400க்கும் மேலான பலஸ்தீனியர்களை விடுவிக்க இஸ்ரேல் ஒத்துக்கொண்டது. கடைசி நேரத்தில் 3 பலஸ்தீனியர்களை விடுவிக்காமல் காலம் தாழ்த்த இஸ்ரேலிய படையினர் மீது தாம் நடத்தும் தாக்குதல் தொடரும் என ஹிஸ்புல்லா அறிவித்தது.

அந்த 2 படையினரை கடத்துவதற்கு காரணம் காசா பகுதியில் இஸ்ரேலியர்கள் பாதுகாப்பு கவசத்தை தாக்கி பலஸ்தீனியர்களின் வீடுகளை புல்டோசர் மூலம் தகர்த்தமையேயாகும். மேலும் யூன் மாதம் ஒரு இஸ்ரேலிய படைவீரர் கைது செய்யப்பட்டு இஸ்ரேலில் கைதுசெய்யப்பட்ட பலஸ்தீனியர்களைவிடுதலைசெய்வதாகஇஸ்ரேல் அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்படாமல் இருப்பதை காட்டியது. இஸ்ரேலிய படைவீரரை கைதுசெய்து விடுதலை செய்வதன் மூலம் இஸ்ரேலிய சிறையில் வாடும் பலஸ்தீனியர்களை விடுவிக்கவே ஹிஸ்புல்லா முயன்றது. பிரெஞ்சு பத்திரிகையில் யூலை 12ல் இஸ்ரேலிய படையினர் லெபனான்எல்லைப்பகுதியை கடந்து வந்ததாகவும் அப்போது ஏற்பட்ட மோதலில் ஹிஸ்புல்லா 2 படையினரை சிறைப் பிடித்ததாகவும் அவர்களை மீட்க இஸ்ரேலிய படையினர் உடனே எல்லைக்கு சென்றதாகவும் பெயர் குறிப்பிட விரும்பாத இஸ்ரேலிய அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என்று செய்தி வெளியாகியிருந்தது. அதே தினம் வெளியான ஹிந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகையில் புதன் கிழமையன்று இஸ்ரேலியப் படையினர் இருவரை எல்லைப் பகுதியை கடந்து வந்தபோது ஹிஸ்புல்லா குழுவினர் சிறைசெய்ததாகவும் இஸ்ரேலிய சிறையில் உள்ள பலஸ்தீனியர்களை விடுவிக்கவே இவர்களை கைது செய்ததாக ஹெஸ்புல்லா குழுவினர் தெரிவித்ததாகவும் செய்தி வந்திருந்தது. இச்செய்திகள் பின்னர் எந்தப் பத்திரிகையிலும் வரவில்லை.

## புதிய மத்திய கிழக்குக்கான திட்ட வரையறை:

9.11.2001 சம்பவத்துக்குப் பின் தீவிரவாதத்தின் மீதான போர் நடவடிக்கையில் அமெரிக்க, பிரித்தானிய கூட்டு முயற்சிக்கு இஸ்ரேல் ஆதரவாக இருந்துள்ளது. ஈராக் மீதான ஆக்கிரமிப்பு போருக்குப் பின்னர் சிரியா மற்றும் ஈரான் நாடுகளை evil சக்திகள் என அறிவித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்த கூட்டுமுயற்சி செயல்பட்டது. ஈரானில் உள்ள அரசை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் முயற்சியில் ஐ.நா சபையில் ஈரானுக்கு எதிரான அணுஆயுத கிடங்கு சோதனைக்கான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்த அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது. இந்த தீர்மானம் அந்த நாட்டின் sovereignty ஐ குலைக்கும், நாட்டின் சுய சார்பு தன்மையை கட்டுப்படுத்தும் முயற்சியாகும்.

ஈராக்கில் உலக பேரழிவு சாதனம் தயாரிக்கப் பட்டு வருவதாகவும் அதற்கான சோதனைக்கு உடன்படாத காரணத்தால் ஈராக் மீதான போர் அறிவிக்கப்பட்டு சதாமின் ஆட்சி மாற்றத்திற்காக ஆக்கிரமிப்பு நடத்தப்பட்டதும் உலகம் அறிந்ததே. அச்சமயம் அமெரிக்காவுக்கு, ஈரான், சிரியாவின் ஆதரவு திரட்டப்பட்டது. ஈரானின் ஆதரவு பெற்ற ஷியா குழுவினர் ஈராக்கில் அமெரிக்காவுக்கு ஒத்துழைத்து சதாமுக்கு எதிராக ஆரம்பத்தில் செயல்பட்டனர். பின்னர் அமெரிக்க படையினர் ஈராக்கில் நடத்திய அட்டூழியங்களைப் பார்த்து ஷியா குழுவினர் அமெரிக்காவுக்கு எதிராக மாறியுள்ளனர்.

ஈராக்கிற்கு பின்னர் சிரியா, ஈரான் நாடுகளின் ஆட்சி மாற்றத்துக்கான திட்டத்தை தீட்டியுள்ளது இந்த அமெரிக்க, பிரித்தானிய கூட்டு. 2005ம் ஆண்டு நடைபெற்ற லெபனானின் தலைவர் ஹரிரி யின் கொலைக்கு சிரியா தான் காரணம் என கூறி லெபனானில் தங்கியிருந்த சிரியாவின் படையை பின்வாங்கும்படி ஐ.நா சபை மூலம் அழுத்தம் கொடுக்கப்பட்டது.

இதைவிட ஹிஸ்புல்லா இயக்கத்துக்கு ஆதரவு, ஆயுத உதவி வழங்குவதாக கூறி சிரியா மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டு வருகிறது. இவ்வாறு சிரியா, ஈரான் நாடுகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயலும்போது லெபனான், பலஸ்தீன நாடுகளின் நிலமை அமெரிக்க திட்டத்துக்கு சரியாக வரவில்லை. எனவே ஆயுதம் தாங்கிய ஹெஸ்புல்லாக்கள் இயங்கும் நிலைமையை அங்கிகரித்த லெபனான் மற்றும் ஹமாஸ் போர்ப்படையினர் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிபுரியும் பாலஸ்தீனம் ஆகிய நாடுகளை அறவே ஒழித்து கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டும். இதன் மூலம் மத்தியகிழக்குப் பகுதியில்

www.tamilarangam.net

**மத்தியகிழக்குப் பகுதியில் எதிர்ப்பு ஏதுமின்றி எண்ணெய் கிணறுகளை தேசியமயப்படுத்தப்பட்ட கொள்கைகளை மாற்றி அமைத்திட வழிவகை செய்யப்படலாம். இது தான் இவர்களின் புதிய மத்தியகிழக்கின் உருவாக்கம்.**

எதிர்ப்பு ஏதுமின்றி எண்ணெய் கிணறுகளை தேசியமயப்படுத்தப்பட்ட கொள்கைகளை மாற்றி அமைத்திட வழிவகை செய்யப்படலாம். இது தான் இவர்களின் புதிய மத்தியகிழக்கின் உருவாக்கம்.

ஈராக்கை ஆக்கிரமிப்பு செய்தபின் இதைத்தான் அவர்கள் நடைமுறைப்படுத்தினர். சிரியாவிற்கு அழுத்தம் கொடுப்பதன் மூலம் ஈராக்கின் கர்சுக பகுதியில் இருந்து சிரியா வழியாக இஸ்ரேலுக்கு எண்ணெய் குழாய் திட்டத்தை நிறைவேற்ற சிரியாவை ஒப்புக்கொள்ளச் செய்ய முயற்சிக்கின்றனர். ஈரானை ஆக்கிரமித்தால் மத்தியகிழக்கு முழுவதும் அமெரிக்க, பிரித்தானிய, இஸ்ரேலிய ஆதிக்கத்துக்குள் வந்துவிடும். அதற்கு முதல் சிறிய ஆயுதக்குழுக்களான ஹெஸ்புல்லா, ஹமாஸ் ஐ அடக்குவதன் மூலம் லெபனான், பலஸ்தீனத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும். எனவே தான் ஹமாஸ் ஆட்சிக்கு வந்த சில தினங்களுக்குள் பலஸ்தீனம் மீது பொருளாதார தடையை விதித்தது இஸ்ரேல். அத்தோடு பலஸ்தீன ஹமாஸ் காபினற் மந்திரிகள் 30 பேரை சிறைசெய்தது. மேலும் பலஸ்தீன மின்சக்தி நிலையத்தை தாக்கி நாடு முழுவதையும் இருட்டில் தள்ளியது. இவ்வாறு ஹமாஸ், ஹெஸ்புல்லா அமைப்புகள் மக்கள் ஆதரவு பெற்று பாராளுமன்றத்தில் நின்றாலும் இஸ்ரேல் அவற்றை அங்கீகரிப்பதில்லை.

## லெபனான் மீதான தாக்குதல் - சர்வதேச நாடுகளின்:

லெபனான் மீது தாக்குதல் தொடங்கி 20 நாட்கள் வரை பெரும்பாலான நாடுகள் இஸ்ரேலை கண்டித்ததாக தெரியவில்லை. அமெரிக்கா தனது செனற் சபையில் இஸ்ரேல் தன் சுய பாதுகாப்புக்காக எந்தவித நடவடிக்கையும் எடுக்கலாம் என்றும் இந்த லெபனான் மீதான தாக்குதல் ஹிஸ்புல்லாவின் தூண்டுதலாலேயே தொடங்கியது என்றும் கூறியுள்ளது. ஐ.நா தலைவரான கொபி அனன் ஹிஸ்புல்லா 2 இஸ்ரேலிய வீரரை கடத்தியதை கண்டித்துள்ளார். அதே நேரம் அதற்காக லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல்களையும் குண்டு வீச்சுக்களையும் நடத்துவதை கண்டித்து இஸ்ரேல் படையினர் உடனடியாக பின்வாங்க வேண்டும் என்றும் கேட்டுள்ளார். இஸ்ரேலுக்கு ஆதரவளித்து அமெரிக்கா ஏவுகணைகளையும் ஆயதங்களையும் பிரிட்டனின் ஸ்கொட்லன்ட் விமானநிலையம் வழியாக அனுப்பி வைத்ததையும் கொபி அனன் கண்டித்துள்ளார்.

இஸ்ரேல் லெபனான் மீதான தாக்குதல் என்ற பெயரில் லெபனானில் செயல்பட்டு வந்த ஐ.நா அலுவலகம் மீது தாக்குதல் நடத்தி 2 சீன அலுவலர் இறந்ததை குறித்து சீனா பெரும் கண்டனம் தெரிவித்துள்ளது. அராபியா, எகிப்து போன்ற அரேபிய நாடுகள் ஹெஸ்புல்லாவை குற்றம் சாட்டியுள்ளன. சிரியா, ஈரான் நாடுகள் மட்டுமே இஸ்ரேலை கண்டித்துள்ளன. போரை நீடித்தால் லெபனானில் உள்நாட்டு பிரச்சனை தொடங்கி ஹெஸ்புல்லாவுக்கு எதிராக மக்கள் எழும்புவர் என இஸ்ரேல் நினைத்தது தவறாகிவிட்டது. லெபனான் பாராளுமன்றம் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு போரை கண்டித்து அறிக்கைவிட்டது. அமெரிக்க ஆதரவாளரான ஈராக் நாட்டுத் தலைவரால் தன் உள்நாட்டு அரசியலில் ஷியா மக்களின் உணர்வுக்கு எதிராக எந்த நடவடிக்கையையும் எடுக்க முடியவில்லை. அவர் லெபனான் போரில் அமெரிக்காவின் மெத்தனத் தன்மையை கண்டித்தார்.

ஆசியாவில் பெரும் சக்தி வாய்ந்த நாடுகளாக தம்மை வெளிப்படுத்திக் கொள்ளும் ரஷ்யா, சீனா, இந்தியா போன்ற நாடுகள் இஸ்ரேல் லெபனானில் ஐ.நா அலுவலகத்தை தாக்கிய போது குரல் எழுப்பின. ஆனால் லெபனானிய மக்கள் தாக்கப்படுவது குறித்து எதுவும் செய்யவில்லை. ஹெஸ்புல்லாவின் செல்வாக்கு லெபனானிய ஷியா மக்களிடையேயும் லெபனானின் பலஸ்தீன அகதிகளிடையேயும் வளர்ந்து வருவதை கவனித்து வந்த இந்த அரசுகள் இஸ்ரேல் லெபனான் மீது, பலஸ்தீனம் மீது தாக்குதல் நடத்தியதை, நடத்துவதை கவனிக்கவில்லை என்று கூறவிடமுடியாது.

1989ல் இஸ்ரேலிய படையினர் லெபனானில் உட்புகுந்து ஜிப்சிட் என்ற கிராமத்தில் இருந்து ஷேக் அப்துல் கரீம் ஒபைத் என்ற ஹெஸ்புல்லா தலைவரையும் இன்னும் இருவரையும் கடத்திச் சென்றனர். அந்த இருவரில் ஒருவர் ஹெஸ்புல்லா உடன் சம்பந்தமற்றவர். இதை கண்டித்து ஐ.நா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சபையில் தீர்மானம் 638 நிறைவேற்றப்பட்டு கடத்திச் சென்றவர்களை விடுவிக்க வேண்டும் என்று இஸ்ரேலுக்கு அறிவிக்கப்பட்ட போது இஸ்ரேல் அதனை சட்டை செய்யவில்லை. இதே போல 1994ல் முஸ்தபா அல் திராணி என்ற லெபனானிய ஷியா குழுவின் தலைவரையும் கடத்திச்சென்றது இஸ்ரேல். பஹாவ் என்பவரையும் கடத்திச் சென்றுவிட்டு அது பற்றி தனக்கு ஒன்றும் தெரியாது என்றும் இஸ்ரேல் கூறியது. இவர் 11 ஆண்டுகள் கழித்து இஸ்ரேலிய சுப்ரீம் கோர்ட்டில் விடுதலை பெற்று வெளியில் வந்தார். அவருடன் மேலும் 18 பேர் விடுதலை அடைந்தனர். அதில் இருவர் சிறுபிள்ளைகளாக இருக்கும் போது இஸ்ரேலினால் சிறைபிடிக்கப்பட்டனர்.

இவ்வாறு ஒபைத் மற்றும் திராணி போன்றவர்கள் இஸ்ரேலிய அரசினால் 15 ஆண்டுகளாக பிணைக் கைதிகளாக வைக்கப்பட்டு இருந்தனர். மேலும் ஆயிரக்கணக்கான பலஸ்தீனியர்களை கொடூரமான சிறைத் தண்டனைகளை செய்கின்ற காண்ட்நோமா சிறையில் கூடாரம் 1391ல் அடைத்து வைத்திருந்ததை இஸ்ரேல் 2003ம் ஆண்டு வரை மறுத்துவந்தது. ஆனால் அது பின்னர் உலகுக்கு அம்பலமானது. இவ்வாறாக இஸ்ரேல் லெபனானிய ஷியா மற்றும் லெபனானிய பலஸ்தீன மக்களை சிறைப்படுத்தி கொடுமைப்படுத்துவதை கண்டிக்கவோ நடவடிக்கை எடுக்கவோ ஐ.நா, அமெரிக்கா, நேட்டோ படைகள் முன்வரவில்லை.

## போருக்கான தீர்வும் புதிய நிலமையும்:

இரண்டு நாட்களில் ஹெஸ்புல்லாவை வென்று விடலாம் என்று நினைத்த இஸ்ரேல் ஹெஸ்புல்லாவின் எதிர்ப்பைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளது. 20 நாட்களுக்கு மேலாக விமானத் தாக்குதல் மூலம் பல கட்டடங்களை தரைமட்டமாக்கிய பின்பும் ஹெஸ்புல்லா எதிர்தாக்குதல் நடத்துவது இஸ்ரேலை சற்றே உலுக்கியுள்ளது. சர்வதேச நாடுகளுக்கு அழுத்தம் கொடுத்து ஹெஸ்புல்லாவை நிராயுதபாணியாக்கலாம் என்று நினைத்த அமெரிக்காவின் கனவு நிறைவேறவில்லை. லெபனான் அரசும் லெபனான் இராணுவ தளபதியும் இஸ்ரேலிய படை பின்வாங்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக நின்றமை ஹெஸ்புல்லாவின் பலத்தை உலகுக்கு காட்டியது. ஹெஸ்புல்லாவை சிரியாவின் துணைப்படை என்று அமெரிக்கா கூறியதை நம்ப உலக நாடுகள் தயாராக இல்லை. சிரியாவின் துணைப்படை என்று கூறி ஹெஸ்புல்லாவை வலுவற்றதாக்கலாம் என்று அமெரிக்கா நினைத்தது.

பலஸ்தீனத்தில் இஸ்ரேலை எதிர்க்க முடியாமல் தத்தளித்த ஹமாஸ், ஹெஸ்புல்லா இஸ்ரேலை எதிர்த்து தாக்குவதைப் பார்த்து சந்தோசப்படுகிறது. ஹமாஸ் இன் ஆதரவாளர்கள் சுன்னி இன முஸ்லீம்கள் ஆவர். எனவே ஹிஸ்புல்லா, ஷியா மக்களையும் சுன்னி முஸ்லீம் மக்களையும் இணைக்கும் பாலமாக இருக்கின்றது. எகிப்தின் அப்துல் நாசர் காலத்திற்குப் பின்னர் முதன் முறையாக முஸ்லீம்களால் இஸ்ரேலை எதிர்த்து போராடி இஸ்ரேலை பின்வாங்கச் செய்யமுடியும் என்ற நம்பிக்கை எழுந்துள்ளது.

இப்போது ஐ.நா தீர்மானம் 1701 இன் படி சர்வதேச பாதுகாப்பு படையினர் 15,000 பேர் தென் லெபனானின் லிட்டானி ஆற்றின் அருகே பாதுகாப்புக்காக நிறுத்தப்படுவர் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. இஸ்ரேல் தனது படையை பின்வாங்கி ஷீபா தோட்டப்பகுதிக்குள் கொண்டு செல்லும். இவ்விரு பகுதிக்கும் இடையில் இஸ்ரேல் படையினர் செல்லக்கூடாது. அப்படிச் சென்றால் ஐ.நா பாதுகாப்பு படையினர் நடவடிக்கைஎடுப்பர். இந்தசமாதானஉடன்பாட்டில் இஸ்ரேலியர்களால் சிறைப்படுத்தப்பட்டுள்ள பலஸ்தீனிய மக்களை விடுவிப்பதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும் இஸ்ரேலினால் நாசமாக்கப்பட்ட இடங்களுக்கு எந்தவித நட்டஈடும் வழங்கப்படவில்லை. இதைவிட லெபனானின் ஷீபா தோட்டப்பகுதியில் இருந்து படையை பின்வாங்க இஸ்ரேலுக்கு எந்த அழுத்தமும் கொடுக்கப்படவில்லை.

இதன் மூலம் போர் நடவடிக்கை சமீபகால அமைதியை எட்டினாலும் விரைவாக புதிய மத்தியகிழக்கை உருவாக்கலாம் என்று நினைத்த அமெரிக்காவுக்கு பெரும் சவாலாக முடிந்துள்ளது. லெபனானின் ஹிஸ்புல்லாவின் எதிர்ப்பு நடவடிக்கை முஸ்லீம் தீவிரவாதம் என்ற நிலையில் இருந்து தேசியவாத அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்தி என்ற அளவுக்கு உயர்ந்துள்ளது. பலஸ்தீன மக்களுக்கும் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளுக்கும் ஹிஸ்புல்லாவின் resilience பெரும் எதிர்பார்ப்பையும் நம்பிக்கையையும் அளித்து உள்ளது. ☑

www.tamilarangam.net


# Low Cost Accomodations in London

## Finchley Rd, Archway, Holloway Rd Tube Stations அருகாமையில்

◆ **Flats**

◆ **Studios**

◆ **Rooms**

நூற்றுக்கும் மேற்பட்ட வதிவிடங்கள் வாடகைக்கு உண்டு.

சில நிமிடத்தில் சென்றடையக் கூடியதான போக்குவரத்து வசதிகள் நிறைந்த இடம்.

**மாத வாடகை £400 - £600**

குறிப்பு : மாத வாடகையுடன் ஒரு மாத வாடகை முற்பணமாக செலுத்த வேண்டும். கவுன்சில் ரக்ஸ் மற்றும் கட்டணங்களை குடி இருப்பாளர்களே செலுத்த வேண்டும். மாதாந்த வாடகையை வங்கிக் கட்டளை - **Standing Order** மூலம் செலுத்த வேண்டும். **D.S.S** ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**Tel \ Fax : 020 8905 0452**
**Email : tarrin@desilugroup.com**
**Web : www.desilugroup.com**

**Tarrin Constantine, Group Finance Director, Desilu Group of Companies**
**Collingwood Business Centre, Mercers Rd, London N19 4PU**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிபுணர்களின் தீர்வுப் பொதி

அதிகாரப்பகிர்வு மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தம்தொடர்பாகஆலோசனை வழங்குவதற்காக இலங்கை ஜனாதிபதியினால் அமர்த்தப்பட்ட 18ப் பேர் கொண்ட வல்லுனர் குழுவின் 11 உறுப்பினர்கள் (6 சிங்களவர்கள், 4 தமிழர்கள், 1 முஸ்லீம்) பெரும்பான்மை அறிக்கையை (Majority Report) டிசம்பர் 6ல் வெளியிட்டு உள்ளனர். இவ்வறிக்கை சட்டவாக்கத்திற்குப் போகுமா என்ற சந்தேகத்தையும் இவர்கள் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டி உள்ளனர். இதனை நிரூபிக்கும் வகையில் ஜாதிக ஹெல உருமய கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. இந்நிபுணர்கள் குழு பிரிவினை வாதத்திற்குத் துணை போவதாகக் கூறி டிசம்பர் 12ல் All Party Representative Committee (APRC) இருந்து தாம் வெளியேறுவதாக ஜேவிபி இன் தலைவர் சோமவன்ச அமரசிங்க செய்தியாளர்களுக்குத் தெரிவித்து உள்ளார்.

இலங்கையை பல்லின, பல்வேறு மதங்கள் கொண்ட தீவாக கணித்துள்ள இவ்வறிக்கை மாகாண சபைகள், உள்ளாட்சி சபைகள் மூலமாக அதிகாரங்களை பகிர்ந்து கொள்ளவும் பரவலாக்கவும் வழிவகைகளைக் கண்டுள்ளது. சிறுபான்மையினருடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளாததே நிலைமை இவ்வளவு மோசமடைந்ததற்குக் காரணமெனக் குறிப்பிடும் இவ்வறிக்கை முழுமையான அதகாரப் பரவலாக்கலை ஏற்படுத்த வேண்டும் என்று வற்புறுத்தி உள்ளது. மேலும் ஜனாதிபதியாக உள்ளவரின் இனத்தைச் சாராத இரு வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் துணை ஜனாதிபதியாக நியமிக்கப்பட வேண்டும் என்றும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது.

இவ்வறிக்கை தொடர்பான அரசியல் கலந்துரையாடல் றைசிலிப்பில் தமிழ் சமாதான ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. டிசம்பர் 10ல் இடம்பெற்ற இச்சந்திப்பிற்கு அரசியல் ஆய்வாளர் வி சிவலிங்கம் தலைமை தாங்கினார். கடந்த காலங்களில் முன்வைக்கப்பட்ட தீர்வுகள், ஒப்பந்தங்கள் பற்றிய நம்பிக்கையீனங்கள் இருந்தாலும் கட்சி அரசியலுக்கு அப்பால் இந் நிபுணர்களின் தீர்வுத் திட்டம் வரவேற்கப்பட வேண்டிய ஒன்று என பெரும்பாலும் அனைவரும் அதனை வரவேற்றனர். மேலும் இத்தீர்வுத் திட்டத்தினை சகல தரப்பினரும் ஏற்றுக் கொண்டு இன்பிரச்சினைக்கு தீர்வு காண முன்வர வேண்டும் என்பதும் அங்கு வலியுறுத்தப்பட்டது.

## அச்சந்திப்பில் வெளியிடப்பட்ட கருத்துக்களை கீழே காணலாம்:

நிர்மலா: இப்போதுள்ள சூழ்நிலையில் இதனை வரவேற்பது அவசியம். முக்கியமாக தமிழ் மக்களிடம் இதனைக் கொண்டு செல்ல வேண்டும். இது சந்திரிகா ஆரம்பத்தில் சுமந்து வந்த தீர்வுப் பொதியளவுக்கு இல்லையானாலும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்திலும் பார்க்கச் சிறப்பானது. இன்றைய தனிநாட்டுக்கான போராட்டமானது வலிந்து நடாத்தப்படுகிறது. அதற்கும் தீர்வுக்கும் சம்பந்தமில்லை. ஆகவே நாங்கள் தனிநாட்டுக்கான போராட்டத்தை இதற்குள் பார்க்க முடியாது. அதற்கு அவசியமும் இல்லை.

ராகவன்: இது ஒரு முக்கியமான அறிக்கை. தனிநாட்டுக்கான போராட்டத்தை நீக்கிவிட்டு தீர்வைப் பார்க்க முடியாது. தனிநாட்டுக்கான கருத்தியலையும் உள்ளே வைத்துப் பார்க்க வேண்டும். தொடர்ச்சியாக தெற்கில் வந்த அரசுகளின் தோல்வியிலேயே வி.புலிகளின் கருத்தியல் பலமாகவுள்ளது. ஆயினும் ஒற்றையாட்சி unitary state என்பது இவ்வறிக்கை மூலம் அடிபட்டுப் போயுள்ளது. கிழக்கில் முஸ்லீம், சிங்கள மக்களின் பாதுகாப்பிற்காக அவர்களுக்கு தனிஅலகு கொடுக்கப்படுவது அவசியம். நீண்ட கால இனக் குரோதங்கள் இன்னமும் ரணமாக உள்ளது. இந்தத் தீர்வுத்திட்டம் இப்படியே ஏற்றுக் கொள்ளப்படும் என்று எதிர்பார்க்க முடியாது.

தம்பா: கடந்த கால அனுபவங்களினூடாக இதற்கு அதீத முக்கியத்தவம் கொடுப்பதில் கவனமாக இருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட பிரச்சினைக்கு தீர்வு காண்பது எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்துவிடும் என்பதில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சி - ஐக்கிய தேசியக் கட்சி புரிந்தணர்வு ஒப்பந்தமும் சர்வதேச சமூகம் அதிகாரப் பகிர்வுக்கு அழுத்தம் கொடுப்பதும் உதவியாக உள்ளது. ஆயினும் யுத்த நிறுத்தமும் நிரந்தரத் தீர்வும் ஒன்றையொன்று பின்னிப் பிணைந்தள்ளது. உண்மையான அரசியலைத் தவறவிடக் கூடாது. இவற்றுக்காக அரசியல் அழுத்தங்களை வழங்க வேண்டும்.


பசீர்: இது கல்வியிலாளர்களால் தயாரிக்கப்பட்டு உள்ளது. முரண்பட்டவர்கள் இருந்தாலும் அடிப்படை அம்சங்களில் உடன்பட்டு உள்ளார்கள். வி.புலிகளின் ISGA உடனும் ஒப்பிட்டுப்

தொடர்ச்சி 23ம் பக்கத்தில்....

www.tamilarangam.net

# DATAFORCE UK LTD

**Computer Sales & Services**




**Network / Supply & Installation**

**Computer Maintenance / Remote User / Voice Data Cabling**

**Cat5 e / Wireless Network Telecom Infrastructure Solutions**

E-mail : info@dataforce4u.com

Fax : 0870 766 2310

Web : www.dataforce4u.com

www.tamilarangam.net



# மாவீரனின் மரணம்

சேனன்

சருகோடு சருகாய்
காற்றோடு இழுபட்டு
சாவியந்திரத்தில் மோதி வீழும்
குருத்து உயிர்களே!
சுதந்திரம், சுயநிர்ணய உரிமை, தமிழ்த் தேசியம்
என்றெல்லாம் யாராவது கதைத்தார்களா உங்களிடம்?
ஆயுதம் கொண்டு அரசியல் நிர்வாணம் மறைக்கும்
விளையாட்டில்
ஏன் ஆத்திரத்திற்கும் அன்புக்கும் உரிய
செத்த உயிரே!

விசர்க்கதைகள் கதைக்கும் சிங்களத்துவம்
வைத்துக்கொண்டிருக்கும் புனித முறைகளை
புகழ்பெற்ற குட்டி முதலாளித்துவத்தை
'நாங்கள் ஆழுவோம் நீங்கள் ஆழப்படுவீர்கள்'
என்ற அசரீரியை
வேண்டித் தவம் செய்யும் புனிதப் போரில்
மனிதம் இழப்பது நீ மட்டும் தான்
நாளைக்கும் அதுதான்

விடுதலை கசக்கும் சிங்களத்துவத்திற்கும்
உயிர் வற்றிக்கொண்டிருக்கும்
தமிழ் தேசியத்திற்கும் – தலைமைக்கும்
மற்றும் உலக நாடகளுக்கும்
உன்னையும் என்னையும் பற்றிய
official position ஒன்றுதான்
உலக வரலாறு உன்னை கண்ணாய் போற்றும்
நீ நினைக்கப்படுவாய் என்று
கனவுகள் காணாதே
வாசமில்லா பூக்கள் மட்டுமே
உன் கல்லறை இருக்கும்
இந்தா பிடி என்று
ஈழத்தைத் தந்தாலும்

உன் கருகிப் போன உடலுக்கு
வருசத்தில் ஒருநாள் கூட
காற்றுப்படுமோ என்னவோ?
ஊற்றார் உறவினர் உளறும் வரை பாடலாம்
கரும்புலியாகி கண்டதென்ன பயன்?
புனிதமாய்ப்படுத்தப்பட்ட
வெறும் நம்பர்கள்
நண்பர்கள் அழுவது போல்
கால்ம் உறைந்து நிற்காது
மில்லியன் கணக்கான மக்களுக்கு
அடிவயிற்றில் இருந்து உச்சிவரை
கிளர்ச்சி ஊட்டிய புரட்சியாளர்களை
மறந்த வரலாறுக்கு
இத்தனையாயிரம் கரும் புலிகளை
நினைப்ப வைக்க முடியாது
என்னாலும் முடியாது – உன்
தலைவனாலும் முடியாது
புரட்சியின் எதிர்காலம்
மைக்கல் ஜாக்சனையும் மதனகாமராசர்களையும்
வைத்துப் போற்றும்.

இடைக்கால அற்ப சபலம் தவிர
உனக்கும் எதிர்காலத்திற்கும் தொடர்புகள் இல்லை
ஒரு காலத்தில்
உன் கல்லறையை இடித்து அதில்
முதலாளித்துவம் பிளாட்டுகள் கட்டலாம்
அல்லது
தோண்டி எடுத்து குளியல் தொட்டிகள் உருவாக்கலாம்
அவை அதைத்தான் செய்யும்
ஆதலின் சுடு
உன் போரை நிறுத்தாதே
என்னைச் சுடு
உன் சகலனை சகோதரனை சிங்களவனை
யாரையானாலும் சுடு
என்று அமைதியோ
அன்றே சரி உன் சரித்திரப் புகழ்
பூசிக்கச்சொல்லி வற்புறுத்தப்பட்ட
உயிரை யாசித்து
உட்சுருங்கி வாசிக்க
உயிரின் மதம் மலிவானதல்ல
என் சினம் உன் பலவீனம்
ஆதலின் சுடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இறுதிக்கடவுள்

சுகன் (பிரான்ஸ்)

சூரியதேவன் என்றும் நாம் அவரை அழைத்தோம்
இருளின் சக்கரவர்த்தி என்றும் அழைத்தோம்
பேராபத்தான கடவுள் என்றும்
கல்லையும் உயிர்த்துக் கயவரை அழிக்கும்
கானுறை தெய்வமென்றும் அழைத்தோம்
குடும்பத்திலிருந்து ஒருவரைக் கேட்டுக் கொண்டிருந்தால்
பகாசுதன் என்றும் அழைத்தோம்
பின் நவீனத்துவ நவீனத்துவ வரலாற்று
வரலாற்றுக்கு முன்னான காட்டுமிராண்டி
விலங்குக்காலங்களனைத்தையும் புரட்டி
மாற்றிடும் யுகபுருஷன் என்றும் அழைத்தோம்
உன்னைப் புதைத்த புதைகுழியிலும் இடிவிழ
என்றும் அவரைச் சபித்தோம்
அவர் அற்புதங்கள் நிகழ்த்துவார் என காத்திருந்தோம்
இறந்தோரை உயிர்ப்பிப்பார் என நம்பினோம்
புனைவிற்கும் வெளிக்கும் இருப்பிற்கும் தர்க்கத்திற்கும்
அப்பாலிற்கும் அப்பாலிற்கும் அப்பாலிற்கும் அப்பால்
அவர் இருந்தார்
இன்மையிலும் இருந்தார்
ஒலியலை, மின்னலை ஒற்றைத்துகள் எங்கணும்
தன் நாமத்தை அவர் ஒளிரவிட்டார்
அநாதைக் குழந்தையைப் போல் அவர் எம்மைத் தொலைத்தார்
அபத்தக் கவிதையைப் போல் நாம் அவரைத் தொலைத்தோம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இனி எனது தேசத்தில்!

அவனதும்
அவளதும்
காதலின் விளைவென
தன்னை எண்ணி
கவனமாய்
கருவறையின் சுவர்களிற்
பதியமானது பிள்ளை!

ஓமோன்களை குட்டென்றும்
குறையென்றும் தான
கட்டளை இட்டது மூளை
அவனதும் அவளதும்
காதலின் அடையாளம்
ஆதலால்
கவனமெடுத்து காக்க நினைத்தது
இயற்கை!

கண்கள் யாரைப் போலே
காதும் மூக்கும் யாரைப் போலே
தோலின் நிறம் என்ன
தலையின் முடியின் அளவென்ன
பற்கள் என்ன அரிசியா
அல்லால்
வேர்க் கொம்பா
பார்த்துப் பார்த்து
சிலிர்த்திடும் படியாய்
வேலைகள் செய்தன ஜீன்கள்!

கணக்கிலே சூரனோ
கவிஞனோ கலைஞனோ
அரசியல் தலைவனோ
ஆய்வுகள் புரிபவனோ
ஆணோ அல்லது பெண்ணோ
பேசிப்பேசி திட்டங்கள் இட்டன ஜீன்கள்!

மாமனின் உயரம் கொடுப்போம்
பேரனின் நேர்மை கொடுப்போம்
பாட்டியின் சாந்தம் கலப்போம்
அம்மாவின் கோபமும்
அப்பாவின் கருணையும் சேர்ப்போம்
ஐம்பது வருடம் முன்னம் வாழ்ந்த
அத்தையின் சாயல் கொடுத்து

அதிசயம் செய்வோம் என
ஆரவாரம் செய்தன
அவர்களின் ஜீன்கள்!
கண்கள் வந்தாச்சா
காலும் கையும் வளர்ந்தாச்சா
மூளை நலமா?
இதயம் துடிக்கிறதோ ஏதும் கோளாறா?
நாளும் விசாரணை செய்வதே
வைத்தியன் வேலை!

வாடிப் போய் இருக்கிறாளே அன்னை
ஊட்டம் ஏதும் குறையோ
மாத்திரை மருந்தெல்லாம்
மறக்காமல் எழுதுவான் வைத்தியன்.
வறுமையில் வாடினாலும்
போரினால் கலங்கினாலும்
சேயினை சுமக்கும் தாய்க்கும்
என் நாடு
யாவையும் வழங்கும்
இலவசமாய்!

பயணிப்பவள் பயங்கரம் புரிபவளல்லள்
ரோஜாவை சுமந்து திரியும் பூந்தோட்டக்காரி என்று
பத்திரமாய் இடம் சேர்ப்பான்
வாகன ஓட்டி.
இப்படியெல்லாம் தான்
இதுவரையில் தாய்மையை
கொண்டாடிற்று என் தேசம்
இன்று நடப்பவை கேட்டு
மூர்சையாகிற்று மனிதம்!!

நாளை முதல் என் தேசத்தில்
முழுமனிதர் பிரசவம் ஆகார்
இனி
மிருகங்களால் நிரம்பி வழியும்
என் தேசம்!
காடும் கரம்பையும்
கல்லும் முள்ளுமாய்
மனிதரை தொலைத்து
பாழடைந்து உருக்குலையும்
என் தேசம்!

ஆ. கு: இக்கவிதை கர்ப்பிணிப் பெண்ணொருவர் தற்கொலைக் குண்டுதாரியாகியதை மையமாக வைத்து படைக்கப்பட்டது. ஆனால் அப்பெண் தற்கொலைக் குண்டுதாரி கர்ப்பிணி அல்ல என்பது பின்னர் விசாரணைகளில் வெளிப்பட்டது. ஆதலால் கவிதையின் குறிப்பிட்ட அப்பகுதி நீக்கப்பட்டு உள்ளது. இக்கவிதையை அனுப்பி வைத்தவர் தன்னுடைய பெயரையோ தொடர்பு கொள்வதற்கான முறையையோ அறியத்தராததால் படைப்பாளியுடன் கலந்துரையாடமலேயே அப்பகுதி நீக்கப்பட்டு உள்ளது.

www.tamilarangam.net


IMMIGRATION / EMPLOYMENT / HOUSING / WELFARE

# Rengan N Devarajan

## SOLICITORS



**Immigration & Nationality** | **Employment**

**Landlord & Tenant** | **Housing**

**Welfare Benefits** | **Matrimonial**

**1st Floor**
**128 Ilford Lane, Ilford**
**Essex, IG1 2LE**

**Tel : 020 8478 5797**
**Fax : 020 8478 4486**

www.tamilarangam.net

# We can help you if you wish to return to Sri Lanka. And assist you further once you are back home.



The International Organization for Migration manages migration in a number of ways. In the UK, IOM helps unsuccessful asylum seekers and irregular migrants return to their home countries by coordinating all their travel arrangements including paying for their flight tickets. Asylum seekers are also eligible for extra assistance in their countries of origin. To find out if you qualify for IOM's assistance, call 0800 783 2332. *London office:* 020 7233 0001. *Liverpool office:* 0151 225 0142. *Glasgow office:* 0141 548 8116

IOM International Organization for Migration
0800 783 2332 - www.iomlondon.org

This programme is co-financed by the European Refugee Fund

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்